அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
விகாரி ❂ மாசி (பிப்ரவரி – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5
2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6
3. மகான் தேரையர் அருளிய ஆசி நூல் ........ 11
4. 13.03.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை ஞான வாழ்வு** ........ 16
5. மகான் மாணிக்கவாசகர் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல் ........ 41
6. தினசரி பாராயணம் –வெள்ளிக்கிழமை ........ 45
7. தைப்பூசம் மற்றும் பௌர்ணமி விழா ........ 50
8. மாசி மாத பௌர்ணமி விழா ........ 50
9. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 51
10. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 61

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

பெருமை கூறி உலகை வழிநடத்தும்
பெருஞ்சக்தியான ஞானத்திருவடி நூலுக்கு
வருமுலகில் விகாரி சால் திங்களுக்கான
வழங்குவேன் ஆசிதனை தேரையர் யானும்
ஞானமாக மக்களை நல்வழிப்படுத்த
ஞானதேசிகன் சக்தியாக வரும்
ஞானத்திருவடி நூலை பெற்று
ஞாலமதில் வணங்கும் வாசிக்கும்
வாசிக்கும் மக்கள் வாழ்வினில்
வளமும் நல்ல மாற்றமும் காணும்
ஆசிபட கலிவாழ் மக்கள்
ஆறுமுகனார் சக்தியாக இயங்கும்

– மகான் தேரையர் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

**சித்தர்கள் போற்றித் தொகுப்பு**

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | விசுவாமித்திரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வியாக்ரமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வியாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | விளையாட்டுச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வேதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | 131 |

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# விகாரி வருடம் மாசி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் தேரையர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. ஆனந்த ஞான வடிவே முருகா
அன்பர்கட்கு அருளும் வேலவா
ஞானக்கனியே கனிகிரி வேலா
நம்பிக்கை கொண்ட மக்களுக்கு

2. மக்களுக்கு சர்வ சக்தியுமாக
மகா சூட்சுமமாக அருளியே
ஆக்கமுடன் காத்தருளும் கந்தா
ஆறுமுக அரங்கமகா தேசிகனாக

3. ஆகவே கலியில் அற்புதம் நடத்த
ஆற்றலாக வந்த ஞானபண்டிதா
வகைபட வணங்கி போற்றியே
வல்லமைபட அரங்க ஞானியரின் பெருமை

4. பெருமை கூறி உலகை வழிநடத்தும்
பெருஞ்சக்தியான ஞானத்திருவடி நூலுக்கு
வருமுலகில் விகாரி சால் திங்களுக்கான
வழங்குவேன் ஆசிதனை தேரையர் யானும்

5. ஞானமாக மக்களை நல்வழிப்படுத்த
ஞானதேசிகன் சக்தியாக வரும்
ஞானத்திருவடி நூலை பெற்று
ஞாலமதில் வணங்கும் வாசிக்கும்

6. வாசிக்கும் மக்கள் வாழ்வினில்
வளமும் நல்ல மாற்றமும் காணும்
ஆசிபட கலிவாழ் மக்கள்
ஆறுமுகனார் சக்தியாக இயங்கும்

7. இயங்கும் பிரணவக்குடிலின்
இணையில்லா மகான் அரங்கன்
தயவுநெறி மக்களிடை பரவ
தரணியே ஜீவதயவு எனும் நிலைபெருகி

8. பெருகி உலகம் எங்கிலும்
பேராதரவு சன்மார்க்க வழிக்கு
பெருகியே உலகம் உயிர்க்கொலை நீக்கி
பெருமை மிக்க தயவை வளர்த்து

9. வளர்த்துமே உலக மக்களிடை
வாஞ்சையும் சகோதரத்துவமும்
தளர்வில்லா தன்னார்வ தொண்டும்
தனித்துவமும் பெருகிட நேரும்

10. நேருமையான சமூகம் படைத்திட
நீதிநெறி காட்டும் அரங்க ஞானி
தருமவழிகளை மக்கள் பின்பற்றிவர
தன்னிகரில்லா மாற்றம் காணும்

11. காணவே மக்களிடை ஞானமும்
கட்டுப்பாடு கண்ணியமான வழிகளை
ஞானமாக தரும் அரங்கனின்
நன்னெறி சுத்த சைவ நெறியே

12. நெறிதனை ஏற்று நடந்து
நேருமை குணம் தரும்படி
ஆறுமுக அரங்கனிடம் தீட்சை
அருள்மிக்க சடாட்சர தீட்சையாக ஏற்று

13. ஏற்றுமே நித்ய பூசையாக
இனிதே உலகோர் செய்து கொண்டு
பற்று வைத்து சரவண சோதியென
பழுதில்லா ஞான ஒளி ஏற்றி

14. ஏற்றியே வழிபாடு செய்துமே
இன்னலிலா வாழ்வு தா எனவேண்டி
ஆற்றல்பட அவரவர் கடமையில்
அறம் மீறா வண்ணம் நடந்து

15. நடந்துமே இயக்கம் கண்டிட
நன்மைபட குருவருள் தன்னை
தடையற தொடர்ந்து வணங்கி
தவசக்தியாக்கி கொள்ள மக்களுக்கு

16. மக்களுக்கு மனபலம் கூடும்
மரணம் வெல்லும் திடமும்
தேக்கமின்றி அழியாமைக்கான
திடமும் ஞானமும் கிட்டும்

17. கிட்டுமே அரங்க ஞானிவழி வர
குவலயமே ஞானபலம் கூடி
தட்டாது ஞான யுகமாற்றமும்
தண்டாயுதன் ஞானஆட்சி மாற்றம் பெறும்

18. மாற்றம் செய்ய வந்த தவசி
மகான் அரங்கமகா ராசனே
ஏற்றம் தரும் கலிகால ஞானகுரு
ஏற்று வாரீர் கலிகால இன்னலை வெல்வீர் ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

விகாரி ஆண்டு மாசி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் தேரையர் அருளிய ஆசி நூலின் சாரம் :

ஞான ஆனந்த நிலையில் நிற்கும் ஆனந்த வடிவே முருகப்பெருமானே, உம்மை நம்பிய அன்பர்களுக்கு அருள் செய்கின்ற வேலவனே, ஞானத்தின் விளைந்த ஞானக்கனியே, பழனிமலை வேலவனே, உம்மை முழுமனதாய் வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்ட மக்களுக்கு சர்வ சக்தியுமாய் மகா சூட்சுமமாய் அருள் செய்து ஆக்கமும் ஊக்கமும் அவர்களுக்கு அருளி காத்தருள்கின்ற கந்தப்பெருமானே, கலியுகத்தின் எல்லையில்லா அற்புதங்களை நிகழ்த்தி யுகமாற்றம் செய்யவே அரங்கமகா தேசிகனாக அவதாரம் செய்து மாபெரும் ஆற்றலாக வந்துதித்திட்ட ஞானபண்டிதனே முருகப்பெருமானே, உம்மை முறையோடு திருவடி பணிந்து வணங்கி போற்றியே, வல்லமைமிக்க அரங்கமகா ஞானியின் பெருமைகளை உலகறியக் கூறியே உலகை வழிநடத்தும் பெரும் சக்தியான ஞானத்திருவடி நூலிற்கு விகாரி வருடம் மாசி மாதத்திற்கான ஆசி நூல்தனை தேரையர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தேரையர்.

மக்களை வழிநடத்தி காத்திட மகா ஞானமாக அரங்கன் அருளாய் வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலினை பெற்று வணங்கி படிக்கின்ற மக்களுக்கு அவர்களது வாழ்வினிலே சகலவிதமான வளம் பெருகி நல்ல மாற்றங்கள் உண்டாகும்.

கலியுக மக்களெல்லாம் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வந்து ஆறுமுகப் பெருமானின் சக்தி வடிவமாக இயங்குகின்ற கலியுக மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உபதேசிக்கும் தயவு நெறியினை ஏற்று கடைப்பிடித்திட வேண்டுமப்பா. அரங்கனின் தயவு நெறி உலகினில் பரவபரவ உலகமெங்கும் ஜீவதயவு என்கிற தயவு நிலை பெருகி, உலகமெங்கும் தயவு நெறியாகிய சன்மார்க்க நெறி பரவி, உலக மக்களிடையே உயிர்க்கொலை நீக்கி, பெருமைமிக்க

தயவு உணர்வு வளர்ந்திடும். உலக மக்களிடையே உள்ள பேதாபேதங்கள் எல்லாம் நீங்கி மக்களிடையே சகோதரத்துவம் பெருகி மக்கள் தங்களது சுயநலம் மறந்து பொதுநலமாய் தன்னார்வ தொண்டுள்ளத்தோடு செயல்பட்டு தனித்துவம் மிக்க நன்மக்களாகி சிறப்படைவார்கள்.

உலகினில் உள்ள அநீதிகளை போக்கி நேர்மையான சமுதாயத்தினை படைத்திட, உலக மக்களுக்கு நீதி நெறியினை உபதேசித்து, நல்வழி காட்டும் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் தருமத்தின் வழிகளை உலக மக்கள் ஏற்றுக் கொண்டு, வாழ்வினில் கடைப்பிடித்து வாழ்ந்து வர உலகமே தன்னிகரில்லா மாற்றத்தை காணுமப்பா. மக்களிடையே ஞானமும் கட்டுப்பாடும் கண்ணியமும் பெருகிடும்.

கண்ணியமும், கட்டுப்பாடும், ஞானமும்மிக்க நல்வழிகளை ஞானமாக தந்தருளும் ஆறுமுக அரங்க மகான் உபதேசிக்கும் தூயநெறியே நன்னெறியாகும். அரங்க மகான் கூறும் சுத்த சைவ நெறிகளை உலக மக்கள் எல்லாம் ஏற்றுக் கொண்டு வாழ்வினில் நேர்மை குணம் மிக்கவராய் நடந்திடும் பொருட்டு ஆறுமுக அரங்க மகானிடத்து தீட்சை உபதேசங்களைப் பெற்று சடாட்சர தீட்சையையும் பெற்று அரங்கரின் உபதேச வழி நின்று, தினம்தினம் தவறாமல் ஞானிகளின் திருநாமங்களை மனம் உருகி ஜெபதபங்கள் செய்து வருவதுடன் எல்லா நன்மைகளையும் தந்தருளும் வல்லமைமிக்க சரவண ஜோதிதனை ஏற்றி வைத்து வழிபாடுகளைச் செய்து வர வேண்டும். பூஜையிலே அரங்க மகான் திருவடி பணிந்து குருவே அரங்கமகா தேசிக மகா ஞானியே, இடையூறுகளும், துன்பங்களும் இல்லாத அமைதியான நல்வாழ்வை தந்தருளுங்கள் என வேண்டுகோள் வைத்து வழிபாடுகளைச் செய்து அவரவர்க்கு உண்டான கடமைகளை தர்மநெறி மீறாமல் நடந்து செயல்பட்டு வர வேண்டும்.

தவறாமல் குரு அரங்கமகானை பயபக்தியுடன் பணிந்து மனம் உருகி வணங்கி வந்து குருவருளை உறுதியாகப் பெறுவதுடன் குருவருளை தவசக்தியாக்கி கொள்ள வேண்டும். குருவருளை தவசக்தியாக்கி கொண்ட மக்களுக்கு மனோபலம் பெருகிடும், மரணத்தையும் வெல்லுகின்ற மனோதிடமும், அறிவினில் தெளிவும் உண்டாகி, தடையின்றி அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு பெறும் ஞானத்தை அடையும் திடமும் ஞானமும் பெறுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் உண்மை ஞானநெறிகளை ஏற்று அரங்க மகானை பின்தொடர்ந்து வர இவ்வுலகமே ஞானபலம் பெருகி உலகினில் கலியுகத்தின் ஆற்றல் குறைந்து ஞானயுக மாற்றம் உண்டாகி உலகம் முருகப்பெருமானின் வல்லமைமிக்க ஞான ஆட்சியாக மாறிடும்.

மாற்றங்களை செய்திடவே அவதாரமாக வந்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மட்டுமே இவ்வுலகை காக்கவல்ல ஞானகுரு ஆவார்.

உலகை கலியுகத்தின் பிடியில் இருந்து விடுவித்து ஞானயுகமாக ஆக்கிடும் வல்லமைமிக்க கலிகால ஞானகுருவும் அவரே ஆவார். ஆதலினாலே உலக மக்களே அரங்க மகானை முழு நம்பிக்கையோடு குருவாய் ஏற்றுக் கொண்டு அரங்கனை பின்தொடர்வீர், கலியுக துன்பங்களை வென்று சிறப்பீர்கள் என ஞானத்திருவடி ஆசி நூல் மூலம் உரைக்கின்றார் மகான் தேரையர்.

–சுபம்–

**அஞ்சலென்றே அருளும் அலங்கார அநுபூதி**
**தஞ்சம் என்ற பேருக்கே தான்!**

**அருளாளன் அருணகிரி அருளிய அலங்காரம்**
**பொருள் அறிந்து கற்றவர் புண்ணியரே!**

**– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.**

# முருகன் திருவடி வாழ்க

# துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)
2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).
3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).
4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).
5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
13.03.1988 அன்று அருளிய

# ஞான வாழ்வு

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே தொண்டர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

இந்த சங்கத்தில் நாங்கள் பேசுகின்ற கருத்துகள் எல்லோருக்கும் புரியும்படியாகவும், இலகுவாகவும் இருக்கும். பிறர் அறியாத ஒன்றை நாங்கள் அறிந்திருக்கிறோம். பிறருக்கு புலப்படாத ஒன்றை நாங்கள் அறிந்து கொண்டு, அதைப் பற்றி பேசிக் கொண்டு வருகிறோம். அது உங்களுக்கு புலப்படுமா என்றால், புலப்படும். அது அறியக் கூடியதுதான், ஆனால் இலகுவாக, விரைவாக அறிய முடியாது. ஆனால் அறியலாம்.

இந்த உலகத்தில் வாழ அருட்செல்வமும், பொருட்செல்வமும் வேண்டும். பொருட்செல்வத்தை சாதாரண மக்கள் பெற முடியும். அருட்செல்வத்தை சாதாரண மக்கள் பெற முடியாது. இதற்கு விடாமுயற்சி இருந்தால், சாதாரண மக்களும் பெறலாம்.

இதற்கு ஏதாவது விஞ்ஞான படிப்பு வேண்டுமா? என்றால் தேவையில்லை. சிறப்பறிவு உள்ள மக்களின் துணையே அருட்செல்வத்தைப் பெறுவதற்கு உள்ள உபாயம் ஆகும். இதற்கு வழிகாட்டுகின்றவர்கள் சிறப்பறிவு உள்ள மக்களாக இருக்க வேண்டும், அருட்செல்வத்தைப் பற்றி துல்லியமாக அறிந்த மக்களாக இருக்க வேண்டும். இவர்களை சார்ந்திருந்து சாதாரண மக்களும் அருட்செல்வத்தைப் பெறலாம்.

வியாபாரம் செய்பவர்கள் நெல், மிளகாய், புளி, கொத்தமல்லி போன்றவற்றை தை மாதத்தில் வாங்கி இருப்பு வைப்பார்கள். அந்தந்த காலக்கட்டத்திற்கு தகுந்தாற்போல வாங்கி இருப்பு வைத்துக் கொண்டு, அந்தந்த பொருட்களுக்கு தட்டுப்பாடு வரும்போது விற்று லாபம் சம்பாதிப்பார்கள்.

இவர்கள் எந்த அளவிற்கு மூலதனம் வைத்துள்ளார்களோ, அந்தளவிற்கு வாங்கி இருப்பு வைப்பார்கள். தகுந்த விலை வரும்போது விற்று லாபம் சம்பாதிப்பார்கள்.

மூலதனம் மிகுதி ஆகஆக லாபம் மிகுதியாகும். எந்த அளவிற்கு மூலதனம் உள்ளதோ, அந்தளவிற்கு ஆதாயம் மிகுதியாக இருக்கும். அதுபோல அருட்செல்வத்தைப் பெறுகின்ற மக்களுக்கு பண்புள்ள, அருளாற்றல் உள்ள ஆசானுடைய துணை வேண்டும்.

**முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**
**சார்புஇலார்க்கு இல்லை நிலை.**

**– திருக்குறள் – பெரியாரைத் துணைக்கோடல் – குறள் எண் 449.**

முதல் இல்லாதவருக்கு இலாபமில்லை. மூலதனம் மிகுதியாக உள்ள மக்களுக்கு ஆதாயம் மிகுதியாக இருக்கும். அருளாற்றல் உள்ள மக்களுக்கு ஞானிகளின் தொடர்பு இருக்கும். ஞானிகளுடைய தொடர்பு இருந்தால் அருளாற்றலைப் பெறலாம்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

**– திருக்குறள் – அருள் உடைமை – குறள் எண் 247.**

இங்கே அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்கிறார் மகான் திருவள்ளுவர். **பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு** என்பது போல, **அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை** என்கிறார். இங்கே அருளை முதன்மையாக வைத்து பேசுகிறார். அங்கே பொருளை முதன்மையாக வைத்து பேசுகிறார்.

இந்த உலகத்தில் வாழ, அருட்செல்வமும், பொருட்செல்வமும் வேண்டும். அருட்செல்வம் உள்ள மக்களிடம் பொருட்செல்வம் இருக்காது, பொருட்செல்வம் உள்ள மக்களிடம் அருட்செல்வம் இருக்காது. இது இரண்டும் சேர்ந்து ஒருவரிடம் இருக்கிறது என்றால், அவர் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்? பொருட்செல்வம் உள்ள மக்கள், எந்த துன்பமும் இல்லாத மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வார்கள். அருளுள்ள மக்கள் அவ்வுலக வாழ்க்கையை, மேலான வாழ்க்கையை வாழ்வார்கள்.

நாமெல்லாம் அருளுள்ள மக்கள், இங்கே நாம் அருளை தேடுவதற்காக கூடியிருக்கிறோம். அருள் மனஅமைதியைத் தரும். அதுமட்டுமல்ல நாம் முன்ஜென்மத்தில் செய்த கொடும் பாவங்களை நீக்கும்.

நம்முடைய வினைகளிலிருந்து விடுபட மகான் கருவூர்தேவர், மகான் திருமூலதேவர், மகான் கொங்கணமகரிஷி, மகான் நந்தீசர், மகான் போகமகாரிஷி போன்ற மகான்களை சார்ந்திருக்க வேண்டும். இவர்கள் துணையைக் கொண்டு நம்முடைய வினையை தீர்த்துக் கொள்ளலாம்.

பொருட்செல்வம் வினையைத் தீர்க்காது. அருளுடைய, பண்புள்ள மக்களிடம் பொருள் சேர்ந்தால் அந்தப் பொருளைக் கொண்டே அறம், பொருள்,

இன்பம், வீடு இந்த நான்கையும் பெற முடியும். சிறப்பறிவு உள்ள மக்களிடம் பொருள் சேர வேண்டும்.

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

**– திருக்குறள் – ஒப்புரவு அறிதல் – குறள் எண் 215.**

சிறப்பறிவு உள்ள மக்களிடம் பொருள் சேர்ந்தால், அது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். சிறப்பறிவோடு சேர்ந்து பொருட்செல்வம் இருக்குமேயானால், அதுவே பிறவித் துன்பத்திற்கு மருந்தாக அமையும். இறுகப் பற்றிக் கொள்கின்ற மக்களிடம் பொருள் சேர்ந்தால், அதுவே பிறவித் துன்பத்திற்கு காரணமாகும். ஆகவே பொருளை இறுகப் பற்றக் கூடாது.

அருட்செல்வத்தை சேகரிக்க நாம் இங்கே கூடியிருக்கிறோம். எப்படியெல்லாம் வாழ்ந்தால் அருட்செல்வத்தை பெறலாம் என்பதை ஆராயவே நாம் இங்கே கூடியிருக்கிறோம். இந்த கூட்டமே அருட்செல்வத்தை ஆராய்ந்து, அதை பெறுவதற்கு எந்த வகையில் முயற்சிக்க வேண்டும் என்பதற்காக கூடியிருக்கிறது.

அருட்செல்வத்தை பெறுவதற்குரிய மார்க்கம் என்ன? ஒன்று நாமாக பெறுவதா என்றால் பெறலாம். முன்னோர்கள் அருட்செல்வத்தை பெறுவதற்கு வகுத்துக் கொடுத்த பாதையில் சென்றால் அன்றி அருட்செல்வத்தை பெற முடியாது.

**தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.**

**– திருக்குறள் – அருள் உடைமை – குறள் எண் 249.**

பொருட்செல்வத்தை சேர்க்கும் போது, நெறியோடு சேர்க்க வேண்டும். அந்தப் பொருளைக் கொண்டுதான் அருட்செல்வத்தைப் பெற முடியும். நெறியற்ற முறையில் சேர்த்த பொருட்செல்வத்தைக் கொண்டு அருட்செல்வத்தை சேகரிக்க முடியாது.

சிலர் ஏழைஎளியோரை கசக்கி பிழிந்து வட்டி வாங்குவார்கள். அந்தப் பொருளைக் கொண்டு அன்னதானம் செய்வார்கள். இப்படி செய்வதால் அவர்கள் அருட்செல்வத்தை பெற முடியாது.

ஆனால் அருட்செல்வத்தைப் பெறுவதற்கு நெறிமுறையோடும், தன் மனைவிமக்களோடும், தன்னை சார்ந்தவர்களோடும் இனிமையாக அன்பாக பேசி பழகி, தூய மனதோடு விருந்தை உபசரித்து வாழ வேண்டும். இதுபோன்று ஒவ்வொரு நாளும் பிறர் மனம் புண்படாது வாழ்கின்ற வாழ்வே அருட்செல்வத்தை பெறுகின்ற வழியாகும்.

கொடும்பாவி என் வாழ்க்கையைப் பாழ்படுத்திவிட்டானே என்று யாரேனும் சபித்தால், இவனுடைய வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகிவிடும். இவனால் அருட்செல்வத்தை பெற முடியாது.

**தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்.**

**– திருக்குறள் – அருள் உடைமை – குறள் எண் 249.**

எல்லா மக்களும் பாராட்டுகின்ற அளவிற்கு எவனொருவன் நடந்து கொள்கிறானோ, அவன்தான் சிறப்பறிவு உள்ளவனாக இருக்க முடியும்.

நுணுக்கமான, நுண்ணியமான, மென்மையான அருள் கொண்டு வாழ்வதுதான் அருள் வாழ்க்கை. நல்ல மனதோடும், தூய மனதோடும் செயல்படுவதுதான் அருள் வாழ்க்கை. அருள் வாழ்வை பெறுவதற்கு எல்லோரும் முயற்சிக்கலாம். இதற்கு அருளாற்றல் பெற்ற, அருள் பொக்கிஷமான ஞானிகளின் பாதத்தைப் பற்ற வேண்டும். ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் நமது வினைகள் தீரும்.

பண்போடு இருத்தல், நம்மை நோக்கி வருகின்ற விருந்தினரை உபசரித்தல், முடிந்தளவிற்கு ஏழைகளுக்கு பசியாற்றுவித்தல், உயிர்கள் மீது கருணை காட்டுதல், புலால் மறுத்தல் போன்ற நல்ல பல காரியங்களை கடைப்பிடித்தால், நல்வினை மிகுதியாகும், அருள்வாழ்வு மேலோங்கும். அதன் மூலமாகவும் முன் செய்த பாவங்கள் நீங்கும்.

பிறர் மனம் புண்படாமலும், பிறர் மனம் மகிழ்ச்சியடையும் காரியங்களை செய்தானேயானால், அவன் முன் செய்த வினையை நீக்க முயற்சிக்கிறான் என்று அர்த்தம். ஒவ்வொரு நாளும் பிறர் மனம் புண்படும்படி வாழுகிறான் என்றால், மேலும் மேலும் பாவம் சேர்கிறது என்று அர்த்தம். முன்னே சொன்னது சிறப்பறிவு உள்ள மக்களுக்கு, பின்பு சொன்னது சாதாரண அறிவுள்ள மக்களுக்கு சொன்னதாகும்.

நம்முடைய கொள்கையே, அருள்பலத்தை சேகரிக்க வேண்டும் என்பதுதான். அது நமக்கு புலப்படாது. நம்முடைய செயல்களெல்லாம் நமக்கு நியாயமாகவே தெரியும். நாம் ஒரு காரியத்தை செய்துவிட்டு, அதனால் பிறருக்கு துன்பமில்லை என்று எண்ணுவோம். ஆனால் நாம் செய்த காரியம் நல்லதா? கெட்டதா? என்பது மற்றவருக்குத்தான் தெரியும்.

**தான் என்ற கொடும்பாவம் தீர்க்கும் ஆசான்**
**தர்மத்தின் வழிசொல்லிக் கருணை வைப்பான்**
**ஊன் என்ற மந்திரமே உபதேசித்து**
**உண்மையுடன் சுழிமுனையிலே இருக்கும் என்று**

**கோன் என்ற சிவரூபம் கண்ணில் காட்டி**
**கோபமென்ற முனைபோக்கி ஆசை போக்கி**
**நான் என்ற ஆணவங்கள் தன்னைப்போக்கி**
**நாட்டுவார் குருநாதன் மோட்சந் தானே.**

**– மகான் கொங்கண மகரிஷி கடைக்காண்டம் – கவி எண் 491.**

**தான் என்ற கொடும்பாவம் தீர்க்கும் ஆசான் –** அருள் உள்ள மக்களுக்கு பாவச்சுமை நீங்கும்.

அருளுடைமை பெற்ற மக்களுக்கு முன்செய்த வினை நீங்கும்.

அருளுடைமை பெற்ற மக்களுக்கு வாசியைப் பற்றி அறிகின்ற வாய்ப்பு கிடைக்கும்.

அருளுடைமை உள்ள மக்களுக்கு முன் ஜென்மத்தில் செய்த தீமையை உணருகின்ற ஆற்றலும், இனி நடக்கப் போவதையும் அறிய முடியும்.

அருள் என்ற மூலதனத்தைக் கொண்டுதான் ஞானவாழ்க்கையை மேற்கொள்ள முடியும். அதுமட்டுமல்ல அருள் என்கிற மூலதனம் இல்லறத்திற்கு பயன்படும். இல்லறத்தான் நோய்நொடியில்லாமல், வறுமையில்லாமல் வாழ்வதற்கு அருள் என்ற மூலதனம் வேண்டும்.

பொருள் என்ற மூலதனத்தை மட்டுமே கொண்டு அமைதியாக வாழ முடியாது. அதற்கு அருள் என்ற மூலதனமும் வேண்டும்.

அருள் என்ற மூலதனம் இல்லையென்றால், சாதுசங்கத்தை, சன்மார்க்கத்தை சார்ந்திருக்க வேண்டும். அப்படியிருந்தால் மனம் ஒரு மென்மையான நிலையை அடைய வாய்ப்பிருக்கிறது.

மகான் திருமூலர் அருளாற்றல் உள்ளவர், மாபெரும் யோகி. தன்னுடைய பிறவித் துன்பத்தை ஒழித்தார். எமனை பொடிபொடியாக்கினார். அதுமட்டுமல்ல இந்த உலகம் அழிந்தாலும், தான் அழியாத இடத்திற்கு வந்துவிட்டார். நூறுகோடி யுகங்களை ஒரு நொடிப்பொழுதாக வாழுகின்ற ஆற்றலை அவர் பெற்றிருக்கிறார்.

மகான் திருமூலர் என்றும் மோனநிலையில் உள்ளவர், எப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருக்கின்றவர். அவருக்கு இறப்பில்லை. பிறப்பில்லை, உறக்கமில்லை, சோர்வில்லை. என்றும் ஒரே தன்மையாக இருக்கிறார்.

**தவிர வைத்தான்வினை** என்று திருமந்திரத்தில் மகான் திருமூலதேவர் சொல்கிறார். என்னை சார்ந்து உங்களுடைய வினையை தீர்த்துக் கொள்ளுங்கள் என்று மகான் திருமூலர் சொல்கிறார். ஆகவே மகான் திருமூலதேவரின் திருவடிகளைப் பற்ற வேண்டும். அப்படி பற்றினால் நமக்கு என்னென்ன தீய குணங்கள் உள்ளன என்பதைப் பற்றி அறியலாம்.

எவற்றால் நமக்கு பாவம் சூழுமோ? அவற்றையெல்லாம் உணர்த்துகின்ற ஆற்றல் அவருக்கு உண்டு. நமது செயல் நல்லதா? கெட்டதா? என்று அறிகின்ற ஆற்றலை அவர் தருவார்.

**தவிர வைத்தான்வினை** – ஞானிகளின் பாதத்தைப் பற்றும்போது, நாம் செய்த பாவத்தை நீக்கி விடுவார்கள். **தவிர வைத்தான்** என்றால் நீக்கி வைத்தான் என்று அர்த்தம்.

**தவிர வைத்தான் வினை தன் அடியார்கோள்** – அதுமட்டுமல்ல ஒவ்வொரு மனிதனுக்கும் நவக்கிரக தொடர்பு இருக்கும். சிலருக்கு ஏழரை நாட்டு சனி, அஷ்டமத்து சனி நடக்கிறது என்று சொல்வார்கள். இதுபோன்ற ஒவ்வொரு கிரகத்தின் ஆதிக்கம் வரும்போதெல்லாம் மனிதனுடைய வாழ்க்கை அதற்கு தகுந்தாற்போல் மாறுமென்று சொல்வார்கள். இதெல்லாம் இருக்கலாம். ஏனென்றால் இதெல்லாம் ஞானிகள் வகுத்த பாதை.

ஒன்பது கிரகத்திற்கேற்றவாறு மனிதனுடைய வாழ்வு அமையும். மனிதன் நவக்கிரகத்திற்கு உட்பட்டு வாழ வேண்டுமென்பது சட்டம். அவரவரின் வினைக்கேற்றவாறுதான் நவக்கிரகங்கள் இருக்கும்.

முன்செய்த வினைக்கேற்றார்போல் ஒவ்வொருவருக்கும் கிரகங்கள் அமையும். சில கிரக அமைப்புகளை பார்த்து, நல்ல அதிர்ஷ்டவான் நீ, உலகத்தை ஆளக்கூடிய பாக்கியம் உனக்கு இருக்கிறது என்பார்கள். ஜாதகத்தைப் பார்த்து நீ கோடீஸ்வரனாகலாம் அல்லது கவிஞனாகலாம் என்று சொல்வார்கள்.

நவக்கிரகங்கள் எப்படி அமைகிறது, எந்த நேரத்தில் அவன் பிறக்கிறான்? முன் செய்த நல்வினை இருந்தால் அவன் பிறக்கும்போது, அந்த கிரகங்கள் அவனுக்கு சாதகமாக இருக்கும். முன் செய்த தீயவினை இருக்குமேயானால், தீயவினைக்குரிய கிரக அமைப்புள்ள கோட்சாரப்படி அவன் பிறப்பான்.

ஞானிகளின் பாதத்தைப் பற்றி பூஜை செய்தால், கோள்களுக்கு உட்படாதவாறு நமக்கு அருள் செய்வார்கள். முன் செய்த தீயவினை இருந்தால், இந்தக் கிரகங்கள் அசுரனை வதைப்பது போல் இடர்களை உண்டாக்கும். ஞானிகள் பாதத்தைப் பற்றி பூஜை செய்தால், முன் செய்த தீயவினையை நீக்கி விடுவார்கள்.

**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்**
**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்**
**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டந்**
**தவிரவைத் தான்பிற வித்துயர் தானே.**

**– திருமந்திரம் – சற்குரு நெறி – கவி எண் 2050.**

**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்** – ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் கிரகங்களினால் நமக்கு துன்பம் வராது.

**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதம்** – ஞானிகளின் பாதத்தைப் பற்றினால், அவர்கள் திருவடியை நம் சிரம் மீது வைப்பார்.

திருவடி என்றால் பாதம் அல்ல. ஞானிகள் தங்களுடைய இடகலை, பிங்கலையை நம் சிரசின் மீது வைப்பார்கள். அவர்கள் பாதத்தைப் பற்றும்போது, அவர்களுடைய இடகலையையும், பிங்கலையையும் சேர்த்து நமது புருவமத்தியில் செலுத்தி விடுவார்கள்.

**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதம்** – ஞானிகள் தங்களின் இடகலை, பிங்கலையை நம் சிரம் மீது வைத்து விடுவார்கள். எந்த அளவிற்கு அன்பு செலுத்தினால், அவர்களுடைய இடகலை பிங்கலையை நமது புருவமத்தியில் செலுத்துவார்கள். எந்த அளவிற்கு அவர்களிடம் நாம் அன்பு செலுத்தியிருக்க வேண்டும்.

**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டம்** – ஞானிகள் தங்கள் திருவடியை நம் சிரம் மீது வைத்தார்களானால், எமதூதுவர்களை நாம் வெல்லலாம்.

எமதூதுவர் கூட்டம் என்று சொல்கிறார். எமன் ஒருவன்தான், ஆனால் இங்கே கூட்டம் என்று சொல்கிறார். நமக்கு எதுஎது துன்பம் என்று கேட்டால், நோய் ஒரு எமன், வறுமை ஒரு எமன், முதுமை ஒரு எமன், பண்பில்லாத பிள்ளைகள் ஒரு எமன், பண்பில்லாத மனைவி ஒரு எமன், உண்மைப் பொருள் உணராத ஆசான் ஒரு எமன், நெறிகடந்த அறிவு ஒரு எமன், குடிப்பழக்கம் ஒரு எமன், சூதாடும் பழக்கம் ஒரு எமன். புலால் உண்ணும் பழக்கம் ஒரு எமன், மிகுதியாக உண்பது ஒரு எமன். இதுபோன்ற பல்வேறு துன்பங்கள் நமக்கு எமன்கள். அதனால்தான் எமதூதுவர் கூட்டம் என்று சொன்னார். இவையெல்லாம் நமது ஆயுளை கெடுக்கக் கூடிய எமன்கள்.

ஞானிகள் இந்த எமதூதுவர்களை நீக்கி விடுவார்கள். பண்பட்ட நண்பர்களின் துணை நமக்கு இருக்குமேயானால், நம்மை விட்டு காலக்கூத்தனை நீக்கி விடுவார்கள்.

எப்படியென்றால் நாம் ஞானிகள் பாதத்தைப் பற்றி பூஜை செய்தால், பண்பில்லாத மனைவி, பண்பில்லாத பிள்ளைகள் நம்முடைய சொல்படி கேட்பார்கள். இப்படி எல்லாமே நமக்கு சாதகமாக அமையும்.

**நமன் தூதுவர் கூட்டம்** – இது நுணுக்கமான சொல். நமன் ஒருவன்தான், நமன் தூதுவர் கூட்டம் என்று சொல்லும்போது, நமக்கு துன்பம் தருகின்ற இவர்கள் அத்தனைபேரும் நமக்கு சாதகமாக மாறுவார்கள்.

உண்மைப் பொருள் அறியாத ஆசானும் எமனே.

பண்பில்லாத ஆசானும் எமனே.

ஏனென்றால் அவர்கள் காட்டுகின்ற பாதை நம்மை அறியாமையில் தள்ளுகின்றதாக இருக்கும்.

நெறிகடந்த ஆசான் காட்டுகின்ற பாதையை பின்பற்றுகின்ற மக்களுக்கு அது எமனாக மாறும்.

நெறிக்குட்பட்ட ஆசான் காட்டுகின்ற பாதைதான் பண்புள்ளதாக இருக்கும்.

உண்மைப்பொருள் அறிந்த ஆசான் காட்டுகின்ற பாதை துல்லியமாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் இருக்கும். அது நமக்கு நமனை வெல்லக் கூடிய ஆற்றலை தரும்.

**தவிர வைத்தான் பிறவித்துயர் தானே** – ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் பிறவித்துயரையும் நீக்குவார்கள். நல்ல பண்புள்ள நட்பை உருவாக்குவார்கள். நல்ல பண்புள்ள ஆசானை உருவாக்குவார்கள். பண்புள்ள மனைவியை உருவாக்குவார்கள். பண்புள்ள பிள்ளைகளை உருவாக்குவார்கள். இப்படி முன்னே மாறுபட்டிருந்தாலும், பின்னால் சாதகமாக அமையும்.

பண்பில்லாத மனைவி அமைந்துவிட்டால், ஞானிகளின் திருவடியைப் பற்றி பூஜை செய்தால் அவள் சொன்னபடி கேட்பவளாக மாறுவாள். உன்னுடைய விருப்பத்திற்கு இந்த உலகம் இசைந்து கொடுக்கும்.

நாம் முன் செய்த பாவம், பிள்ளைகள் ரூபமாக, மனைவி ரூபமாக, நண்பன் ரூபமாக வந்தாலும், ஞானிகளின் அருளை மேற்கொள்ள மேற்கொள்ள இவர்கள் அத்தனை பேரும் சாதகமாக அமைவார்கள். இதற்குதான் நாம் பூஜை செய்ய வேண்டுமென சொல்லுகிறோம். தருமம் செய்து அறத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

ஒரு மனிதன் அருட்செல்வத்தை சேகரிப்பதற்கு தானே முயற்சிக்க வேண்டும். அப்படியில்லையென்றால் அருட்கடலாகிய, அருட்பொக்கிஷமாகிய ஞானிகளின் பாதத்தைப் பற்றி அருளை சேகரிக்க வேண்டும். இப்படி அருளை சேகரிக்கும்போது முன்வினை நீக்கப்படும்.

**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்**
**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்**
**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டந்**
**தவிரவைத் தான்பிற வித்துயர் தானே.**

**– திருமந்திரம் – சற்குரு நெறி – கவி எண் 2050.**

மூவாயிரம் ஆண்டுகள் சமுதாயத்தில் இருந்து தவமியற்றி, ஒரு ஆண்டுக்கு ஒரு கவி பாடியிருக்கிறார் மகான் திருமூலதேவர்.

திருமந்திரம் என்பது மூவாயிரம் கவிகளை கொண்டது. அந்த கவிகள் அத்தனையும் அருட்கடல்.

**தவிர வைத்தான் பிறவித்துயர் தானே** – பிறவித்துயரை நீக்கி விடுவார்கள். இப்படி ஒரு பெரிய தத்துவத்தை இந்த ஒரே பாடலில் மகான் திருமூலதேவர் கூறியுள்ளார். இதுபோன்ற ஆற்றலைப் பெற்ற மக்கள், ஆசான் துணையைக் கொண்டு வாழ்கின்ற மக்களுக்கு, எதையும் அறிகின்ற ஆற்றல் இருக்கும்.

இடகலை, பிங்கலை என்பதைப் பற்றி பேசும்போது சிலருக்கு புலப்படாது. ஆனால் ஞானிகளின் பாதத்தை பற்றுகின்ற மக்களுக்கு புலப்படும்.

ஆசானின் பாதத்தைப் பற்றினால் சுற்றத்தாரைப் பற்றி அறிகின்ற ஆற்றல் கிடைக்கும். அருளுள்ள மக்கள் சுற்றத்தாரை சார்ந்தும் சாராமலும் இருப்பார்கள்.

உலக நடையில் உள்ள மக்கள், மனைவி மக்களோடு சார்ந்திருப்பார்கள். ஆனால் சிறப்பறிவு உள்ள மக்கள், மனைவி மக்களை சார்ந்தும் சாராமலும் இருப்பார்கள்.

மகான் மாணிக்கவாசகர், மகான் தாயுமானசுவாமிகள், மகான் திருமூலதேவர், மகான் பட்டினத்தார், மகான் இராமலிங்கசுவாமிகள் போன்ற ஞானிகள் சார்ந்தும் சாராமலும் இருப்பார்கள்.

ஞானிகள் இல்லறத்தை துறந்துதான் துறவறத்தை மேற்கொண்டார்கள். தாமரை இலை தண்ணீர் போன்று இருப்பார்கள். தாமரை தண்ணீரில்தான் இருக்கும். ஆனால் தண்ணீரில் ஒட்டாது. அதுபோன்று இவர்கள் இருப்பார்கள்.

பிள்ளைப்பூச்சி சேற்றில்தான் இருக்கும். ஆனால் சேறு அதன் உடம்பில் ஒட்டாது. புளியம்பழத்தை பார்த்தால் ஒன்றாக இருப்பது போன்று இருக்கும். ஆனால் ஓடும் புளியும் தனித்தனியாக இருக்கும். இப்படி சார்ந்தும் சாராமல் இருக்கக் கூடிய அறிவை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் நாமெல்லாம் சார்ந்தேதான் இருப்போம். இதனால் பந்தபாசம் சூழ்ந்து பிறவித் துன்பத்தை ஒழிக்க முடியாத ஒரு பயம் ஏற்படும்.

**உற்ற வேளைக் குறுதுணை யாயிந்தச்**
**சுற்ற மோநமைக் காக்குஞ்சொ லாய்? நெஞ்சே!**
**கற்றை வார்சடைக் கண்ணுதல் பாதமே**
**பற்ற தாயிற் பரசுகம் பற்றுமே.**

**– மகான் தாயுமானவர் – பொன்னை மாதரை – கவி எண் 77.**

மகான் தாயுமானசுவாமிகள் நெஞ்சுக்கு உபதேசம் செய்கிறார்.

மகான் தாயுமானசுவாமிகள் 17ம் நூற்றாண்டில் சித்தி பெற்றவர். மகான் தாயுமானவர் அடக்கமான இடம் இராமநாதபுரம் அருகில் லெட்சுமிபுரம் என்ற ஊர் ஆகும்.

மகான் தாயுமானசுவாமிகள் மாபெரும் யோகி என்பது ஒரு சிலருக்குத்தான் தெரியும். மகான் மாணிக்கவாசகரையும், மகான் இராமலிங்கசுவாமிகளையும் எல்லோருக்கும் தெரியும். இவர்கள் எல்லோருக்கும் அறிமுகமானவர்கள். ஞானிகளின் பெருமைகளைத்தான் இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

**உற்ற வேளைக் குறுதுணை யாயிந்தச்**
**சுற்ற மோநமைக் காக்குஞ்சொ லாய்? நெஞ்சே!**

உற்ற வேளை என்பது நோய் வரும்போது, வறுமை வரும்போது, காலன் வரும்போது என்பதாகும்.

நமக்கு அடாது துன்பம் வரும்போது சுற்றத்தார்கள் உதவ மாட்டார்கள். எமன் வரும்போது சுற்றத்தார்கள் நமக்கு கைகொடுப்பார்களா? என்று மனதிற்கு உபதேசிக்கின்றார்.

மரணம் வரும் காலத்திலே, எமதூதுவர் வரும் காலத்திலே இந்த சுற்றத்தார்கள் உதவி செய்வார்களா? என்று கேட்கிறார். இப்படி சொல்வதால் இல்லறத்தை விட்டு நீங்குவது என்பது அர்த்தமல்ல. இல்லறத்தை சார்ந்து ஒவ்வொரு நாளும் தனது கடமையை செய்து கொள்ள வேண்டும் என்பதே பொருள்.

**சுற்றமோ நமைக் காக்குஞ்சொலாய்? நெஞ்சே!** – துன்பம் வந்த காலத்திலே சுற்றத்தார்கள் நமக்கு துணையாக இருக்க மாட்டார்கள். ஒன்றே ஒன்று நாம் செய்த நல்வினைதான் நமக்கு துணையாக நிற்கும்.

**மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயில்மட்டே**
**இனமான சுற்றம் மயான மட்டேவழிக் கேதுதுணை**
**தினையாம் அளவெள் ளளவா கினுமுன்பு செய்தத‌வந்**
**தனையாள என்றும் பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே.**

**– மகான் பட்டினத்தார் பாடல் – பொது – கவி எண் 12.**

நாம் செய்த தவமும் தருமமும்தான், உற்ற வேளைக்கு உறுதுணையாக இருக்கும். எமன் வருகின்ற காலத்திலே நமக்கு உற்ற துணையாக இருப்பது நாம் செய்த தவமும் தருமமும்தான்.

நீங்கள் தவமும், தருமமும் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம். தருமம் என்பது இனிமையாக பேச வேண்டும். அதுவும் வஞ்சனையற்று பேச வேண்டும். இனிமையாக பேசுவதே தருமம் என்பார்கள்.

முகத்திலே கடுகடுப்பு, சொல்லிலே கடுகடுப்பு இருந்தால் அவன் பாவம் செய்கிறான் என்று பொருள். சொல்லிலே நயம் இருந்தால் அவன் புண்ணியம் செய்கிறான் என்று பொருள்.

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.**

**– திருக்குறள் – இனியவைகூறல் – குறள் எண் 91 .**

இனிமையாக பேசுவதும் ஒரு தருமம்தான். ஒவ்வொரு நாளும் நான் இனிமையாக பேச அருள் செய்ய வேண்டுமென ஆசான் அகத்தீசரை பூஜை செய்து கேட்க வேண்டும். என்னுடைய மனம் புண்படும்படியாக பேசினாலும் அதை தாங்கிக் கொண்டு மலர்ந்த முகத்தோடு இனிமையாக பேசுவதற்கு அருள் செய்ய வேண்டுமென ஆசான் அகத்தீசரை கேட்டால் நிச்சயமாக கைகூடும்.

சாந்தம், தன்னடக்கம், தயை, கருணை, இனிமை, பிறருக்கு உதவி செய்கின்ற பக்குவம், அதற்கேற்ற சூழ்நிலை எங்களுக்கு அமைய வேண்டுமென்று தினமும் நாங்கள் கேட்போம். இப்படி ஆசானை கேட்ககேட்கதான் நமக்கு அருள் செய்வார்கள். இப்படி கேட்காவிட்டால் எப்பொழுதும் மனதிலே அமைதி இருக்காது. அமைதி இல்லையென்றால் முகத்திலே வாட்டம் இருக்கும். ஆகவே மனஅமைதியே முகத்தில் மலர்ச்சியை உண்டாக்கும். மனதில் எந்தளவிற்கு அமைதி இருக்கிறதோ அந்தளவிற்கு முகத்தில் மலர்ச்சி இருக்கும்.

மனஅமைதி இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம்? நீங்கள் தலைவனை பூஜை செய்யாத குறையே தவிர வேறொன்றுமில்லை. மனஅமைதியில்லாத மக்களுக்கு முகத்தில் சோர்வும் கடுகடுப்பும் இருக்கும். அதைதான் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொல்வார்கள்.

எந்த துன்பத்தையும் தாங்கிக் கொள்வது என்பது சின்ன விஷயமல்ல. ஆகவே துன்பம் வரும்போதெல்லாம் ஞானிகளின் பாதத்தைப் பற்றினால் மனதிலே கவலை இருக்காது. மனதிலே கவலையில்லாமல் இருந்தால், முகத்தில் மலர்ச்சி இருக்கும், அப்பொழுது சொல்லிலே நயம் இருக்கும். ஆகவே இனிமையாக பேசுவதும் ஒருவகையான தர்மம்தான்.

சிலபேர் பேசியே பாவத்தை சேர்த்துக் கொள்வார்கள். அதுவும் அறியாமையில் இருக்கின்ற மக்கள் தினம்தினமும் பாவத்தை சேர்த்துக் கொள்வார்கள். தனக்கு கீழ் பணிபுரிபவர்களை தினமும் கடுகடுப்பாக பேசியே தினமும் பாவத்தை சேர்த்துக் கொள்வார்கள்.

சிலபேர் மனைவியை கடுமையாக பேசுவான். தாய் தந்தையரை கடுமையாக பேசுவான். தன்னை இந்தளவிற்கு ஆளாக்கிய தாய் தந்தையரை கடுகடுப்பாக பேசி பாவத்தை சேர்த்துக் கொள்வான். ஆசானை வணங்கினால் இனிமையாக பேசுகின்ற பண்பு வரும். தாய் தந்தையரை இகழ்ந்து பேசினால், கடுமையாக பேசினால் அது பெரிய பாவமாகும். ஆகவே இனிமையாக பேசுகின்ற மக்கள் அறத்தையும் தருமத்தையும் சேகரிக்கிறார்கள்.

என் மனம் புண்படும்படி யாரேனும் பேசினாலும், தாங்கிக் கொள்கின்ற பண்பு வேண்டும், இனிமையாகப் பேசி, அவர்களுக்கு பதில் சொல்கின்ற பரிபக்குவம் வேண்டுமென்று ஆசானை கேட்டால், அது கைகூடும்.

சிந்தனையால், சொல்லால், செய்கையால் நமக்கு பாவம் வரும். இதை மனம், மொழி, மெய் போன்றவற்றால் பாவம் வரும் என்றும் சொல்வார்கள். இந்த மூன்று வகையால்தான் பாவம் சேரும்.

வீடு, அலுவலகம், பழகுகின்ற நண்பர்கள் இந்த மூன்றில்தான் ஒருவனுக்கு பாவம் வந்து சேரும். இந்த மூன்றும் நல்லபடியாக அமைய வேண்டும். இந்த மூன்றும் செம்மையாக அமைய வேண்டுமென்றால் அவன் ஒன்று தர்மம் செய்திருக்க வேண்டும் அல்லது தவம் செய்திருக்க வேண்டும்.

நல்ல குடும்பம் அமைய வேண்டும், நல்ல ஸ்தாபனம் அமைய வேண்டும், நல்ல நண்பர்கள் அமைய வேண்டும், முரண்படாத நண்பர்கள் அமைய வேண்டும். இப்படி நமக்கு சாதகமாக அமையுமானால், நிச்சயமாக நாம் கடுகடுப்பாக பேச வேண்டிய சூழ்நிலை வராது. இப்படி எல்லாவற்றையும் பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

**உற்ற வேளைக்கு உறுதுணையாய் –** உற்ற வேளைக்கு உறுதுணையாய் இருப்பது ஒன்று தவம், இன்னொன்று தருமம். இனிமையாக பேசுவதே தருமமாகும். முடிந்த அளவிற்கு உதவி செய்தலும் தருமமாகும்.

உதவி செய்ய வாய்ப்பில்லையென்றால் உபத்திரவம் செய்யாதிருக்க வேண்டும். பிறர் மனம் நோகும்படி பேசாதிருத்தல் நல்லது. பிறருக்கு துன்பம் செய்யாதிருத்தலும் தருமமாகும். பிறரை குறை சொல்லாதிருப்பதும் தருமமாகும். ஆகவே பூஜை செய்யும்பொழுது பிறரிடம் குறை காணாத அறிவு எனக்கு வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும். பிறருடைய ஆக்கத்தை கண்டு பொறாமைப்படாதிருக்க வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும். இது சிறப்பான வேண்டுகோள்.

நான் பிறருடைய ஆக்கத்தைக் கண்டு, செல்வத்தைக் கண்டு, வளர்ச்சியைக் கண்டு, அழகைக் கண்டு பொறாமைப்படாதிருக்க அருள் செய்ய வேண்டுமென்று பூஜையில் கேட்க வேண்டும். எனக்கு பொறாமை உணர்ச்சி வராதிருக்க அருள் செய்ய வேண்டுமென்று கேட்கும்போது, நிச்சயமாக பொறாமை குணம் வராது. அன்று கேட்டால் அன்றே வராது, தொடர்ந்து ஞானிகளை பூஜை செய்து கேட்டுக் கொண்டே வர வேண்டும்.

ஞானிகள் அனைவரும் பொறாமை உணர்ச்சி அற்றவர்கள், பிறருடைய ஆக்கத்தைக் கண்டு பொறாமைப்பட மாட்டார்கள், வஞ்சமில்லாத வாழ்க்கையை மேற்கொண்டவர்கள், காமவிகாரம் அற்ற மக்கள், குணக்கேடு அற்ற மக்கள். பல்வேறு தீய சக்திகளையெல்லாம் விரட்டி அடித்த மக்கள்.

ஞானிகள் அருட்கடலாக இருக்கின்றார்கள். நாம் எதையெல்லாம் ஞானிகளிடம் கேட்கிறோமோ, அதையெல்லாம் நமக்கு அருள் செய்யக்கூடிய வல்லமை அவர்களுக்கு உண்டு. அப்பொழுதுதான் அது உற்ற வேளைக்கு உறுதுணையாக இருக்கும்.

ஞானிகள் மீது செலுத்திய பக்தியும், நம்முடைய நல்ல செய்கையும்தான், எமதூதுவன் நம்மை நெருங்கும் வேளையில், நமக்கு உற்ற துணையாக இருக்கும். அதுதான் புண்ணியம்.

பிறருடைய துன்பத்தை உணருகின்ற பக்குவம் இருக்குமேயானால் அது புண்ணியம். பிறருடைய துன்பத்தை உணருகின்ற பக்குவம் இல்லையென்றால் அது பாவம்.

நன்னெறியை கடைப்பிடித்தால், அந்திம காலத்தில் உற்ற வேளைக்கு உறுதுணையாக அது இருக்கும்.

**உற்ற வேளைக் குறுதுணை யாயிந்தச்**
**சுற்ற மோநமைக் காக்குஞ்சொ லாய்? நெஞ்சே!**

இறுதி காலத்திலே எமதூதுவர்கள் வருகின்ற காலத்திலே எனக்கு எது உற்ற துணை என்று கேட்டான்.

**புற்றில்வா ளரவு மஞ்சேன்**
**பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்**
**கற்றைவார் சடையெம் மண்ணல்**
**கண்ணுதல் பாத நண்ணி**
**மற்றுமோர் தெய்வந் தன்னை**
**யுண்டென நினைந்தெம் பெம்மாற்**
**கற்றிலா தவரைக் கண்டா**
**லம்மநா மஞ்சு மாறே.**

**– திருவாசகம் – அச்சப் பத்து – கவி எண் 1.**

மனமே உனக்கு உபாயம் சொல்லுகிறேன் கேள் என்று மகான் மாணிக்கவாசகர் சொல்கிறார். அந்திம காலத்தில் சுற்றத்தார்கள் உனக்கு உதவி செய்ய மாட்டார்கள். அந்திமகாலத்திலே உனக்கு உற்ற துணை எது?

**கற்றைவார் சடை எம்அண்ணல் –** நீண்ட சடாபாரம் கொண்ட ஈஸ்வரன் திருவடியே உனக்கு உற்ற துணையாக இருக்கும். அந்த திருவடியைப் பற்றினால் அது உனக்கு உற்ற துணையாக இருக்கும். ஞானிகள் அனைவரும் இந்த உண்மையை கண்ட மக்கள்.

மகான் தாயுமானசுவாமிகள் ஆசானிடம் கேட்கிறார். ஆசான் அவருக்கு எப்படி சுட்டிக் காட்டியிருக்கிறார் என்று ஆராய்ந்து பார்க்கும்போது,

**கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரெனப்**
**பண்டு மின்றுமென் பானின் றுணர்த்திடும்**
**அண்ட னே! உனக் கோர்பதி னாயிரம்**
**தெண்டன்; என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே.**

**– மகான் தாயுமான சுவாமிகள் – பொன்னை மாதரை – கவி எண் 64.**

ஈஸ்வரனுடைய திருவடியே நமக்கு உற்ற துணையாக இருக்குமென்று சொல்கிறார். இங்கே **கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரென** என்று சொல்கிறார்.

உலகத்தில் உள்ள அனைத்து காட்சிகளையும் நாம் கண்டு அறிய முடியும். அமாவாசை அன்று இரவு நேரத்தில் வெளிச்சம் இல்லாதபோது நமது கண்களால் காட்சியை காண முடியாது. காரணம் ஒளி இல்லாத காரணத்தினால், நம்மால் காண முடியவில்லை. அதைதான் **கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரென** என்கிறார்.

இரவு நேரத்தில் பொருள் காணாமல் போகலாம், கைவிட்டு போகலாம், தவறியிருக்கலாம். விடியற்காலையில் வெளிச்சத்தில் தேடலாம் என்று சொல்வார்கள். வெளிச்சம் இருந்தாலன்றி பொருளை கண்டு அறிய முடியாது. கண்கள் இருந்தாலும் இருட்டில் பார்க்க முடியாது. இரவில் வெளிச்சம் இல்லாதபோது பொருளை காண முடியாது. ஆகவே வெளிச்சம் இருந்தால்தான் பொருளை அறிய முடியும்.

**கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரென** – என்னுடைய கண்ணுக்கு வெளிச்சமாக நீ இருந்து பொருளைக் காட்டுகிறாய் என்று சொல்வார். கதிரவனுடைய வெளிச்சம் இல்லையென்றால் கண் இருந்தும், பொருளை காண முடியாது. இருட்டில் இருக்கும்போது பொருளை அறிய முடியாது.

ஆசான் அகத்தீசர் போன்ற மாபெரும் யோகிகளிடம், பல்லாயிரம் கோடி முறை உங்களுடைய பாதத்தில் தெண்டனிடுகிறேன், என்னுடைய பொய்யை தீர்த்துவிடு என்று மகான் தாயுமானசுவாமிகள் சொல்கிறார்.

மகான்கள் எப்பொழுதும் உள்ளதை உள்ளவாறு அறிவார்கள். ஆனால் நம்மால் உள்ளதை உள்ளவாறு அறிய முடியாது. அவர்கள் உண்மையை உண்மையென்று அறிவார்கள். நாம் உண்மையை பொய் என்று அறிகிறோம். அதுதான் நம்மிடம் இருக்கின்ற பெரிய பலகீனம்.

உண்மையை உண்மையென்று அறிகின்ற ஆற்றலைப் பெற்றவர்கள் ஞானிகள். உண்மையை பொய் என்று உணர்கின்ற பலகீனம் இருந்தால் அது அறியாமை.

மெய்யை பொய்யாக கருதுவது, பொய்யை மெய்யாக கருதுவதுதான் அறியாமை. இந்த அறியாமை நீங்குவதற்கு, பூஜை செய்து ஆசான் திருவடி பணிந்து கேட்க வேண்டும்.

**பண்டு மின்றுமென் பானின் றுணர்த்திடும்** – பண்டும்இன்றும் என்றால் தொன்மையானது என்பதாகும். இந்த ஜென்மத்திலே எனக்கு உண்மைப் பொருளை உணர்த்தினாய். இதற்கு காரணம் முன்ஜென்மத்தில் செய்த புண்ணியம்.

**எண்ணிலி யூழி தவஞ்செய்திங் கீசனை**
**உண்ணிலைமை பெற்ற துணர்வு.**

**– ஔவைக்குறள் – உள்ளுணர்தல் – குறள் எண் 1.**

**பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து**
**நல்லுணர்வு பெற்ற நலம்.**

**– ஔவைக்குறள் – உள்ளுணர்தல் – குறள் எண் 2.**

மனிதன் ஞானியாவதற்கு பல ஜென்மங்களாக பாடுபட்டிருக்க வேண்டும். இதுதான் அடிப்படை.

**பண்டு மின்றுமென் பானின் றுணர்த்திடும்** – முன் ஜென்மத்திலேயே எனக்கு புண்ணியத்தை சேர்ப்பதற்கு உணர்த்தினாய். இந்த ஜென்மத்திலும் எனக்கு உணர்த்தினாய். அதுமட்டுமல்ல, இனி பிறவி எடுத்தால் அதிலும் வந்து நீ எனக்கு உணர்த்த வேண்டும் என்பார்.

பொய்மை என்று சொல்லப்பட்டது புறஉடம்பு. இந்த உடம்பிற்குள்ளே அகஉடம்பு, புறஉடம்பு என்ற இரண்டு உண்டு. புறஉடம்பிலுள்ள மாசு நீங்காமல் அகஉடம்பு தெளிவை பெறாது.

**இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை**
**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்**
**இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை**
**வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.**

**– திருமந்திரம் – குருபூசை – கவி எண் 1852.**

இந்து என்பது சந்திரகலை. பானு என்பது சூரியகலை. பானு என்றால் சூரியன், மதி என்றால் சந்திரன்.

**தெண்டன்; என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே** என்று மகான் தாயுமானசுவாமிகள் சொல்கிறார். பொய்மையை தீர்க்க வேண்டுமென்கிறார். எது பொய்? இடகலையும் பிங்கலையும் கீழ்நோக்கி சென்றால், அது பொய்யான வாழ்வு என்பார். அது பொய்யை உண்டாக்கும். **என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே** என்று சொன்னார்.

**இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை** – இந்து என்றால் சந்திரகலை, பானு என்றால் சூரியகலை. இலங்குகின்ற இடம் என்பது புருவமத்திக்கு செல்லுகின்ற இடம் என்பார்.

கீழ்நோக்கி வாசி சென்றால் அது பொய்யான வாழ்வு. அது தீர்க்க முடியாத வாழ்வு. கீழ்நோக்கி வாசி சென்றால், அது பிறவித்துன்பத்தை உண்டாக்கும். அதுதான் தூலதேக வாழ்வு ஆகும். அது காமதேகம். அது காமதேகம் மட்டுமல்ல, அது நரகத்திற்குரிய வாழ்வாகும்.

**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்** – அசுரர்க்கு அது ஆதாயத்தைக் கொடுக்கும்.

காமத்திற்கு உற்ற அனைத்தும் அசுர வாழ்வு.

மெய்யுணர்வு, காமவிகாரமற்ற ஒன்று ஞானவாழ்வு. அது தேவவாழ்வு.

**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்** – இடகலை, பிங்கலை இயக்கமே பசிக்கு காரணம்.

மூச்சுக்காற்று நாள் ஒன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு முறை வந்துபோகின்ற காரணத்தினாலே, உள்கருவிகரணங்கள் இயங்கும். அப்படி கருவிகரணங்கள் இயங்குகின்ற காரணத்தினால் பசி வரும். பசிக்கு உணவு தந்தால் தேகம் சத்து அசத்தை பிரிக்கும். அப்படி பிரித்து மெய், வாய், கண், மூக்கு, செவி என்று சொல்லப்பட்ட பஞ்சபூதங்களை இயக்கும். அதன் காரணமாக மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று சொல்லப்பட்ட அந்தக்கரணங்களை இயக்கும். அதன் காரணமாக மனக்கிளர்ச்சி ஏற்பட்டு காமவிகாரத்தை உண்டாக்கும். அதன் காரணமாக நரைதிரை வந்து, முதுமை வந்து வீழ்ந்து போவான்.

வாசி இயக்கத்தினால் பசி எடுக்கும். அதற்கு உணவு தந்தால், காமத்தை உண்டாக்கும். அது அசுரர்களுக்கு ஆக்கத்தை உண்டாக்கும். கீழ்நோக்கக் கூடிய இந்த சுவாசத்தோடு வாழ்ந்தால், அசுரர்க்குத்தான் ஆக்கத்தை கொடுக்கும். அது அசுர வாழ்வைத்தான் தரும். அசுரத்தன்மை என்பது காமவிகாரம், நரைதிரை மூப்பு ஆகும்.

**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்** – அசுரர்களுக்கு ஆக்கத்தை தரும்.

**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம், இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை, வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே** – அதுதான் தேவ வாழ்க்கை.

**இலங்காத் தலத்திடை** – இடகலையும், பிங்கலையும் கீழ்நோக்காது, இந்த இரண்டையும் சேர்த்து புருவமத்தியில் செலுத்திவிட்டால் அதுவே **வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே** என்கிறார். அதுதான் மேலான வாழ்க்கை, தேவ வாழ்க்கை. அதற்கு நாம் பாடுபட வேண்டும். இதுபோன்ற காரியத்தை நம்மால் செய்ய முடியாது.

வாசி என்று சொல்லப்பட்ட மூச்சுக்காற்றை மேல்நோக்கி செலுத்தினால் அது தேவவாழ்க்கை. அது கீழ்நோக்கினால் அது அசுரவாழ்க்கை. அது அசுரர்க்குத்தான் ஆதாயத்தைக் கொடுக்கும். பல்வேறு விகாரமே அசுரத்தன்மை. மெய்யுணர்வு அற்ற தன்மையே அசுரத்தன்மைதான்.

**வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே –** அதுதான் உண்மையான பூசை. இதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நாம் தொட்டது துலங்குவதற்காகவும், வறுமையிலிருந்து விடுபடுவதற்காகவும், மனஅமைதிக்காகவும் பூஜை செய்து கொண்டிருக்கிறோம்.

இதைவிட மேலான பூசை **வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே** என்கிறார். ஆகவே பிறவித்துன்பத்தை நீக்குவதற்காகத்தான் பூசை செய்ய வேண்டும்.

**இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை**
**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்**
**இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை**
**வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.**

**– திருமந்திரம் – குருபூசை – கவி எண் 1852.**

இடகலையையும், பிங்கலையையும் புருவமத்தியில் செலுத்தி பூசை செய்வதே உண்மையான பூசை. அதுதான் பிறவித்துன்பத்தை ஒழிக்கக் கூடிய பூசை. மற்ற பூசையெல்லாம் உண்மையான பூசை அல்ல.

அன்பர்கள் அத்தனை பேருக்கும் அந்த வாய்ப்பு உண்டு. அதற்காக முயற்சிக்க வேண்டும்.

**பகவற்கே தாகிலும் பண்பில ராகிப்**
**புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்**
**முகமத்தோ டொத்துநின்று ஊழிதோ றூழி**
**அகமத்த ராகிநின் றாய்ந்தொழிந் தாரே.**

**– திருமந்திரம் – மகேசுவர பூசை – கவி எண் 1865.**

ஞானியாவதற்கும், பிறவித்துன்பத்தை ஒழிப்பதற்கும், உள்கருவிகரணங்களை அறிவதற்கும் தொண்ணூற்றாறு தத்துவத்தை இயக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

பசி ஏன் வந்தது? காமம் ஏன் வந்தது? மூச்சுக்காற்று ஏன் அசைகிறது? உள்ஆதாரங்கள் எத்தனை? பஞ்சபூதாதிகளின் இயல்பு என்ன? என்பதையெல்லாம் அறிய முயற்சிப்பார்கள். ஞானத்தை அடைய முயற்சிப்பவர்கள் இவற்றையெல்லாம் அறிந்திருக்க வேண்டும். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்கினை

போன்றவைகளெல்லாம் தத்துவக்குவியல். இவற்றின் ஒவ்வொரு அசைவையும் அறிந்திருக்க வேண்டும். இதையெல்லாம் அறிந்தாலன்றி ஈசனை அணுக முடியாது.

தன்னை அறிய வேண்டும், உலகத்தைப் பற்றி அறிய வேண்டும். ஆதார இயக்கம், மன இயக்கம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் போன்றவற்றின் தன்மையையும், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் போன்றவற்றையும் அறிய வேண்டும். கோசம் ஐந்து, மலம் மூன்று, நல்வினை தீவினை போன்றவற்றை அறிந்து மற்றும் வாசியின் இயக்கத்தையும் அறிய வேண்டும். குருவின் மண்டலங்களை அறிந்து, வாசியை கட்டுகின்ற இடத்தை அறிய வேண்டும்.

வாசியை கட்டவும், அதை அவிழ்க்கவும் அறிந்த மார்க்கம் இது. கட்டுகின்ற மார்க்கமும், அதை அவிழ்க்கின்ற மார்க்கமும் மிகப்பெரிய தத்துவக்குவியல் ஆகும். மூச்சுக்காற்றை அறிந்த மக்கள் கோடானுகோடி இரகசியத்தை அறிந்திருக்க வேண்டும்.

மூச்சுக்காற்றை வசப்படுத்தவும், கட்டவும், நிறுத்தவும், மாற்றவும், இயக்கவும் தெரிந்திருக்க வேண்டும். இந்த அறிவு இல்லையென்றால் அது குற்றம் என்று சொல்கிறார் மகான் திருமூலதேவர்.

**பகவற்கே தாகிலும் பண்பில ராகி –** பண்பில்லாதவர்களாக இருந்தாலும் குற்றமில்லை. அதற்குரிய சிறப்பறிவு உனக்கு இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

**புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும் –** உள்ளக் களிப்போடு நீ பூஜை செய்தாலே போதும். சிலருக்கு போதிய கல்வியறிவு இருக்காது. ஆனால் சாதாரணமான மக்கள், உள்ளம் உருகி ஆசான் அகத்தீசரை பூஜிப்பார்கள். இவர்கள் காலையில் எழும்போதே ஆசான் அகத்தீசர் நாமத்தையும், மகான் திருமூலதேவர் நாமத்தையும் சொல்வார்கள். இவர்கள் உள்ளம் உருகி அன்போடு பூஜிப்பார்கள்.

எல்லா தத்துவங்களையும் அறிந்து முயற்சிப்பவன் ஒரு படிதான் கடந்திருப்பான். ஆனால் இவன் கல்வியறிவு இல்லாதவனாக இருப்பான். ஆசானை உள்ளம் உருக பூஜித்த காரணத்தினாலே மூன்றாம் படியை கடந்திருப்பான்.

எல்லா தத்துவங்களையும் அறிந்து கற்றவன் ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பே, சாதாரண கல்வியறிவு இல்லாதவன் உள்ளம் உருக பூஜை செய்து ஞானியாவான். இப்படிப்பட்ட வாய்ப்பு இருக்கிறது.

**புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்** – மத்தம் என்றால் உள்ளக் களிப்பு. உள்ளக் களிப்போடு பூஜை செய்தால் தத்துவத்திற்குரிய அறிவே தேவையில்லை. உண்மைப் பொருளை அறிவதற்கு பல லட்சக்கணக்கான கவிகளைப் படித்திருக்க வேண்டும். ஆனால் இது தேவையேயில்லை, உள்ளக்களிப்போடு மகிழ்ச்சியோடு பூஜை செய்தாலே போதும்.

**புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும் முகமத்தோ டொத்துநின் றாழிதோ றூழி** – பொருளை அறியாவிட்டாலும் உள்ளம் உருக பூஜித்ததால் ஊழிதோறூழி செய்த தவத்தின் வலிமையை இவன் பெறுகின்றான். பல யுகங்கள் பாடுபட்டு தவம் செய்து பெற வேண்டிய தவ வலிமையை, இவன் உள்ளம் உருக பூஜித்து பெறுகிறான் என்றால் எவ்வளவு பெரிய ஆற்றல் இது.

**முகமத்தோ டொத்துநின் றாழிதோ றூழி அகமத்த ராகிநின் றாய்ந்தொழிந் தாரே** – உள்ளம் உருக பூஜித்தவர்கள்தான் முதலில் சித்தி பெறுகிறார்கள். சாதாரண ஒரு மனிதனிடம் நம்முடைய அன்பர்கள் ஆசான் அகத்தீசரை வணங்கினால் நமக்கு நல்லது நடக்கும் என்று சொல்வார்கள். அதையே அவன் தேவ வாக்காக எடுத்துக் கொள்வான். அவன் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்திடும்.

அவன் காலையில் எழுந்து உள்ளம் உருக பூஜிக்க ஆரம்பித்து விடுவான். அனைத்தும் கற்றவனைவிட, உள்ளம் உருக பூஜித்தவன் விரைவில் சித்தி பெறுவான். எல்லா நன்மையையும் அவர்கள் பெறுவார்கள். கற்றுதான் முன்னேற வேண்டும் என்பது அவசியமல்ல. இங்கே இருக்கின்ற நாம் அனைவரும் உள்ளம் உருக ஆசானை பூஜித்தாலே போதும், தத்துவத்தைப் படித்து காலத்தை வீணாக்க வேண்டாம்.

**தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்**
**வைத்தவருண் மோன வள்ளலையே – நித்தமன்பு**
**பூணக் கருது நெஞ்சு; போற்றக் கரமெழும்பும்;**
**காணத் துடிக்குமிரு கண்.**

– மகான் தாயுமானவர் பாடல் – உடல் பொய்யுறவு – **கவி எண் 29.**

தத்துவத்தை படித்து காலத்தை வீணாக்காதே என்கிறார் மகான் தாயுமானவர். **தத்துவப் பேயோடே** – தத்துவத்தை பேய் என்கிறார். கவியைப் படித்து அறிய முடியாது. அதன் உண்மைப் பொருளை கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு சிக்கல் நிறைந்த ஒன்று.

**தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்** – தத்துவத்தைப் படிக்கிறேன் என்று தலையடித்துக் கொள்ளாதே என்கிறார். படித்து காலத்தை வீணாக்காதே என்கிறார்.

**வைத்தவருண் மோன வள்ளலையே நித்தமன்பு பூணக் கருது நெஞ்சு** – நித்தம் அன்புடன் உள்ளம் உருக பூஜை செய்ய வேண்டும் என்கிறார். இப்படி உள்ளம் உருக ஆசானை அன்புடன் பூஜை செய்தால் உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

**இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை**
**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்**
**இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை**
**வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.**

**– திருமந்திரம் – குருபூசை – கவி எண் 1852.**

ஆனால் இங்கே, **பகவற்கே தாகிலும் பண்பில ராகிப் புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்** என்று சொல்கிறார்.

**பகலும் இரவும் பயில்கின்ற பூசை**
**இயல்புடை யீசர்க் கிணைமல ராகப்**
**பகலும் இரவும் பயிலாத பூசை**
**சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே.**

**– திருமந்திரம் – குருபூசை – கவி எண் 1855.**

இங்கே **பகலும் இரவும் பயில்கின்ற பூசை** என்கிறார். அங்கே **இந்துவும் பானுவும்** என்று சொன்னார். இந்து என்பது சந்திரன், பானு என்பது சூரியன். ஞானியாவதற்கு இதைப் பற்றிதான் முதன்முதலில் கற்றுக் கொள்ள வேண்டும், மூச்சுக்காற்றினுடைய இரகசியத்தை அறிய வேண்டும். இடகலை, பிங்கலை மார்க்கத்தை அறிய வேண்டும். இடகலை, பிங்கலை மார்க்கம் மட்டுமல்ல, இருபக்கம் இயக்கி ஒருபக்கமாக மாற்றுகின்ற ஆற்றலைப் பெற வேண்டும். இது ஒரு தத்துவம். ஒரு சில சாதுசங்கம் பக்தி நெறியை போதிக்கும். அது பிறவித்துன்பத்தை ஒழிக்காது.

**முனிவரொடு ரிஷிமுனிவர் சித்தர்தாமும்**
**முராரி அயன் தேவர்களும் முன்னோர்தாமும்**
**மனிதர்களும் அசுரர்களும் மாதவத்தோர்**
**வாசிபிடித் தேறிமயிர்ப் பாலந்தாண்டி**
**தனிவழியே தமர்வாச லூடேசென்று**
**தாண்டவம்செய் தில்லைவனம் சார்ந்தபேர்க்கு**
**தொனிமுழங்கும் திருவாடு துறையைப்பார்க்கில்**
**சூரியனும் சந்திரனும் தோற்றமாமே.**

**– மகான் அகத்தியர் – துறையறி விளக்கம் – கவி எண் 22.**

ஞானிகள் பக்திநெறியைப் பின்பற்றிய மக்களா, வாசிநெறியைப் பின்பற்றிய மக்களா என்றால், முனிவர்கள், ரிஷிகள், அசுரர்கள், தேவர்கள் இவர்கள் அனைவருமே வாசி பிடித்து ஏறி மயிர்ப்பாலம் தாண்டியவர்கள்.

புருவமத்திக்கும், பிடரிக்கும் மயிரிழை போன்ற ஒரு நரம்பு உண்டு. அந்த வழி எது? என்பதை அறிய வேண்டும். மிகப்பெரிய பக்திமானாக இருந்தாலும் சரி, இதை கண்டிப்பாக அறிய வேண்டும். பக்தி செலுத்தக் கூடாதா என்றால், பக்தி செலுத்தினால்தான் இந்த பாதையை அடைய முடியும்.

**முனிவரொடு ரிஷிமுனிவர் சித்தர்தாமும் முராரி அயன் தேவர்களும் முன்னோர்தாமும்** – பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், சித்தர்கள், அசுரர்கள், தேவர்கள், முனிவர்கள் என்று சொல்கிறார். இவர்கள் சித்தி பெறுவதற்கு, மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவதற்கு வாசியை பின்பற்றியிருக்கிறார்கள்.

மயிரிழை போன்ற நரம்பு புருவமத்திக்கும், பிடரிக்கும் இடையே இருக்கிறது. அந்த நரம்பு மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்கினை போன்ற ஆறு ஆதாரங்களையும் ஊடுருவி நிற்கும். இதை நெருப்பாறு மயிர்ப்பாலம் தாண்டி என்று சொல்கிறார்.

இதை அறியவில்லையென்றால் அவர்கள் கற்க வேண்டும். இதை அவன் கற்று வாசி பிடித்து ஏறி மயிர்ப்பாலம் தாண்ட வேண்டும். இதை கற்காவிட்டால், நிச்சயமாக அவன் பிறவித்துன்பத்தை ஒழிக்க முடியாது. ஆனால் இதை கற்பதற்கு ஆசான் திருவடியே துணை.

**பகலும் இரவும்** – பகலில் சூரியன், இரவில் சந்திரன் தோன்றும். **பயில்கின்ற பூசை** – கற்றுக் கொள்ள வேண்டிய பூசை.

**இயல்புடை யீசர்க் கிணைமல ராக** – அதுதான் உண்மையான பூசை.

**பகலும் இரவும் பயிலாத பூசை சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே** – இவன் தத்துவங்களை கற்று செய்தாலும், கற்காமல் செய்தாலும் சரி, இவனுடைய பூசையை ஆசான் ஏற்றுக் கொள்வார்.

இடகலை, பிங்கலை, சுழிமுனை இரகசியத்தை அறிந்து பூஜை செய்தாலும் ஆசான் ஏற்றுக் கொள்கிறான், அறியாமல் செய்தாலும் ஏற்றுக் கொள்கிறான். ஆகவே பூசை என்பது உண்மையாகும். பூசை என்பது மிகமிக அவசியம் என்பது இந்த கவியின் சாரம்.

நாங்கள் இந்த கவிகளை படித்து அளவிலாத மகிழ்ச்சி அடைந்தோம். எங்களுக்கு இடகலை, பிங்கலை, சுழிமுனை இரகசியம் தெரியும். மோனநிலையும் எங்களுக்கு தெரியும்.

மோனநிலை என்பது இடகலை, பிங்கலையை ஒன்றுபடுத்துவதாகும். வாய் மூடி மௌனியாக இருப்பது மோனமல்ல.

சில அன்பர்களை ஞாயிற்றுக்கிழமைதோறும் மௌனமாக இருக்க சொன்னோம். ஏனென்றால் முன்கோபம் இருப்பவர்களுக்கு மௌனமாக இருக்க சொன்னோம். முன்கோபத்தை குறைக்க மௌனவிரதத்தை பழகிக்கொள்ள

சொன்னேனே தவிர, அது பிறவித்துன்பத்தை ஒழிக்கும் என்று நாங்கள் சொல்லவில்லை.

சிலர் கடவுளை அடைவதற்காக வாய்பேசாது மௌனமாக இருப்பார்கள். அப்படி மௌனமாக இருப்பதை ஒரு பெரிய சாதனையாக நினைத்துக் கொண்டிருப்பார்கள். வாய் பேசாமல் இருப்பது சாதனையல்ல. அது ஒரு வேதனைக்குரிய ஒன்று. ஆகவே மோனநிலை என்பது சின்ன விஷயமல்ல. இடகலை, பிங்கலை ஒன்றுபடுவதுதான் மோனநிலை.

**பகலும் இரவும் பயில்கின்ற பூசையே** உண்மையான பூசை.

**இயல்புடை யீசர்க் கிணைமல ராக –** இதுபோன்ற உண்மையை அறியாத மக்கள் வாய் மூடி மௌனமாக இருப்பதால் பயனில்லை. அது ஒருவகையான பயிற்சியே தவிர, மோனநிலை அல்ல. நாங்கள் மௌனமாக இருக்கச் சொன்னது, ஒரு வகையான பயிற்சிக்கே தவிர, அது பிறவித் துன்பத்தை ஒழிக்குமென்று நாங்கள் சொல்லவில்லை. அது ஒருவகையான பயிற்சி, அது ஒரு சாதனம். பிற்காலத்தில் மௌனவிரதம் இருக்கின்ற மக்கள் சாந்தமுள்ள மக்களாக ஆவதற்கு அது ஒரு வழி.

மௌனவிரதம் இருக்கும்பொழுது மனம் புண்படும்படியாகவோ, கோபம் வரும்படியாகவோ யாரேனும் பேசினால், அதை பொறுத்துக் கொள்ளுகின்ற பண்பு அவனுக்கு வரும். அது மனவளர்ச்சியைக் காட்டும். அது பண்பை வளர்த்துக் கொள்கின்ற பாதையாகும்.

**வாய்க்குங் கைக்கு மௌன மௌனமென்**
**றேய்க்குஞ் சொற்கொண் டிராப்பக லற்றிடா**

நாங்கள் சொல்வதெல்லாம் கண் மூடி தியானம் செய்வதற்கு தடையான கருத்தல்ல. இராப்பகல் அற்ற இடம்தான் மௌனம்.

சிலர் கடவுளை அடைவதற்கு பேசாமல் மௌனமாக இருக்கிறேன் என்று சொல்வார்கள். ஆனால் விஷயம் தெரிந்தவர்கள், வீட்டில் வளர்க்கும் கால்நடைகள் வாய்பேசாது மௌனமாக இருக்கிறதே, இதற்கும் அவருக்கும் வித்தியாசமே இல்லையென்று சொல்வார்கள். நாங்கள் சொல்லவில்லை.

**இராப்பகல் அற்றிடா** என்றால் இடகலையும் பிங்கலையும் இல்லாத இடமாகிய புருவமத்தியாகும். இதை அறியாத மக்கள் வாய்மூடி மௌனமாக இருப்பதால் பயனில்லை. அவனை கால்நடைக்கு ஒப்பானவன் என்று விஷயம் தெரிந்தவர்கள் சொல்வார்கள்.

**வாய்க்குங் கைக்கு மௌன மௌனமென் றேய்க்குஞ் சொற்கொண் டிராப்பக லற்றிடா –** சாமியார் மௌனமாக இருக்கிறார் என்று சொல்வார்கள். வாய் இருக்கிறதல்லவா, பேச வேண்டுமல்லவா, ஏன் மௌனமாக இருக்கிறாய்.

**ஏய்க்கும் சொல்** – பொதுமக்களை அவன் ஏமாற்றுகிறான். யாரையும் நாங்கள் இகழ்ந்து பேசவில்லை. சில பண்புள்ள மக்களும் இருக்கிறார்கள். மோனநிலை என்கிற இரகசியம் தெரியாமல் அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான் என்கிறார் மகான் திருமூலதேவர்.

எங்களுக்கு இராப்பகல் அற்ற இடம் தெரியும். நாங்கள் ஆசான் கட்டளைப்படி மௌனமாக இருப்போம்.

**இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி**
**இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே**
**இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே**
**இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே.**

**– திருமந்திரம் – திருமூலர் வரலாறு – கவி எண் 80.**

நாங்கள் இராப்பகல் அற்ற இடமாகிய புருவமத்தி வாழ்க்கையை வாழ்கிறோம். நாங்கள் மௌனமாக இருப்பதற்கு காரணம் உண்டு. மற்றவர்களுக்கு இந்த உண்மையை சொல்வதற்கும் காரணம் உண்டு.

**வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு**
**வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்**
**வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்**
**கோய்திற வாவிடிற் கோழையு மாமே.**

**– திருமந்திரம் – தாரணை – கவி எண் 593.**

**வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு** – மாட்டிற்கு ஐந்தறிவு. மனிதனுக்கு ஆறறிவு. மனிதனுக்கு நுணுக்கமாக அறிகின்ற ஆற்றல் உண்டு. மனிதன் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்றையும் அறிவான். அதுமட்டுமல்ல பிறவித்துன்பத்தை ஒழிக்கின்ற ஆற்றல் மனிதனுக்கே உண்டு.

**வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு** – அவனுடைய அறிவு ஐந்தறிவு, ஆனால் வாய் மூடி இருப்பதால் ஆறறிவு என்று நினைத்துக் கொண்டிருக்கின்றான். சிறப்பறிவு உள்ள மக்கள்தான் மோனநிலையை அறிந்து மேற்கொள்ள வேண்டும். வாசி வசப்படுகின்ற மார்க்கமே மோனநிலையாகும்.

**வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்** – வளி என்று சொல்லப்பட்ட காற்றை வளியிட்டு பாய்ச்சுவார்கள், புருவமத்தியில் ஒடுக்கிவிடுவார்கள். அப்படி ஒடுக்கிவிட்டால் அன்றுமுதல் நூறு கோடி ஆண்டுகளை ஒரு நொடிப்பொழுதாக வாழக் கூடிய ஆற்றலைப் பெறுவார்கள், எமனை பொடிப்பொடியாக்கி விட்டார்கள். அவன் அன்றுமுதல் மரணமிலாப் பெருவாழ்விற்கு எத்தனித்து விட்டான். அவனுக்கு மரணமே கிடையாது. ஆசான் அகத்தீசர் மேல் சத்தியமிட்டு சொல்கிறேன். அதுதான் உண்மையான மௌனமாகும்.

**வாய்க்குங் கைக்கு மௌன மௌனமென்று ஏய்க்குஞ் சொல்** – ஏய்க்கிற சொல் இருக்கக் கூடாது. பேசாமல் மௌனமாக இருப்பதை மோனநிலையென்று நினைத்து தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான். மேலும் மற்றவனையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறான். அது மோனம் அல்ல.

**இராப்பகல் அற்ற** – இராப்பகல் அற்ற இடமாகிய புருவமத்தியே மோனநிலை. அதுவே சமாதிநிலை, அதுவே மோனநிலை.

**நாய்க்கு இன்பமுண்டோ** – நாய்க்கு இன்பம் உண்டா என்று கேட்கிறார். அதுவா பேசும். இவர்களெல்லாம் உண்மைப்பொருள் அறியாத மக்கள், அதனால் மகான் தாயுமானசுவாமிகள் இப்படி சாடுகிறார். எது மோனநிலையென்று ஆசானை அல்லவா கேட்டிருக்க வேண்டும். நீயாக ஒரு முடிவெடுத்துவிட்டு வாய்மூடி மௌனமாக இருக்கிறாய். அதனுடைய பயன் என்ன? அதனால்தான் உன்னை மகான் தாயுமானசுவாமிகள் இப்படி சாடுகிறார்.

சிலர் வாய்மூடி மௌனியாக இருந்து கொண்டு, இதுவே பிறவித்துன்பத்தை ஒழிக்குமென்று கற்பனை செய்து கொள்கிறார்கள். அதைத்தான் குற்றமென்று சொல்கிறேன். இது பிறவித்துன்பத்தை ஒழிக்குமென்று நாங்கள் சொல்லவில்லை.

**வாய்க்குங் கைக்கு மௌன மௌனமென்**
**றேய்க்குஞ் சொற்கொண் டிராப்பக லற்றிடா**
**நாய்க்கு மின்பமுண் டோ? நல் லடியரைத்**
**தோய்க்கு மானந்தத் தூவெளி வெள்ளமே!**

**– மகான் தாயுமானவர் – பொன்னை மாதரை – கவி எண் 42.**

**நாய்க்கு மின்பமுண்டோ? நல்லடியரைத் தோய்க்கு மானந்தத் தூவெளி வெள்ளமே!** – இதெல்லாம் மோனநிலை அல்ல, இன்பம் தராது என்பதை அன்பர்கள் உணர வேண்டும். உனக்கு இன்பம் தருவது எது? தினமும் ஞானிகளை பூசிக்கின்ற மக்களை, தினமும் தம்மால் முடிந்த அளவு உதவி செய்கின்ற மக்களை தெய்வம் சாருகிறது. ஆகவே நல்ல மனம் எங்கிருக்கிறதோ? அதுவே தெய்வம் தங்குகின்ற வீடாக இருக்கிறது. தீயமனம் எங்கு இருக்கின்றதோ? அது அசுரர்கள் தங்குகின்ற இடமாக இருக்கும்.

நாம் நல்ல மனதை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். நாம் துன்பமில்லாத வாழ்வை வாழ்வதற்கு ஆசைப்படலாம். இந்த எண்ணம் நல்ல எண்ணம்தான். ஆனால் எல்லோருக்கும் அமையுமா? பல்வேறு வகையான துன்பங்களில் மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்து துன்பப்படுகிறார்கள். பல்வேறு வகையான துன்பதுயரங்களில் இருக்கின்ற மக்களுக்கு அமைதி இருக்காது, வேறு வழியில்லை.

பொருளை நெறியோடு சேர்க்க வேண்டும், பொருளை கொண்டு அருளை சேகரிக்க வேண்டும், தன்னை சார்ந்த தாய், தந்தை, மனைவி, மக்களுக்கு பாதுகாவலனாக இருக்க வேண்டும், அருள்பலம் வேண்டும் என்பதற்காக ஞானிகளை பூஜை செய்ய வேண்டும், ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜை செய்தால்தான் நவக்கோட்களுக்கு உட்படாத வாழ்க்கை அமையும், ஞானிகள் எமனை வென்றவர்கள், அவர்களை வணங்கினால் நாமும் எமனை வெல்லலாம், உற்ற வேளைக்கு உறுதுணை ஞானிகள் பூஜையே, இடகலை, பிங்கலை கீழ்நோக்கினால் அது பொய்யான வாழ்வு, அதுவே மேல்நோக்கினால் மெய்யான வாழ்வு, அதுவே தேவ வாழ்வு, இராப்பகல் அற்ற புருவமத்தி வாழ்க்கை வாழ்பவர்களே மோனநிலையை மேற்கொள்ள முடியும், அதுவே தேவவாழ்வு, ஞானிகள் வாசி பிடித்து மயிர்ப்பாலம் தாண்டியவர்கள், அவர்கள்தான் நூறுகோடி யுகங்களை ஒரு நொடிப் பொழுதாக வாழுகின்ற ஆற்றலை பெற்றிருக்கிறார்கள் என்று இப்படிப்பட்ட கருத்துகளை இதுநேரம் வரை நாங்கள் சொல்ல நீங்களெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். நீங்களும் இதை பின்பற்றி மேலான நிலையை அடைய, எல்லோருக்கும் ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு முடிக்கிறேன் வணக்கம்.

–சுபம்–


முருகப்பெருமான் தங்கி அருள் செய்யும் இடமே
துறையூர் ஓங்காரக்குடில் ஆகும்.

நமது குலதெய்வம் முருகப்பெருமானே

**எந்தை நந்தனார் இணையடி போற்றிட**
**சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே!**

**திருமூலர் திருவடியை தினமும் போற்றிட**
**கருமூலம் கடக்க காட்டுவார் உண்மையை!**

**– மகான் ஆறுமுக அரங்கமகாதேசிகர்.**

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு
**R.சுரேஷ்** – 94434 21935

# மகான் மாணிக்கவாசகர் அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

**31.12.2019**, செவ்வாய்க்கிழமை

1. தான தரும சக்தி பரவிடும்
   தயவை ஊட்டும் அரங்கா
   ஞானமெனும் உன் கொள்கையை
   நம்பகமுற எவர் ஏற்கின்றாரோ
2. ஏற்பவர் வாழ்வில் சித்தியும் அவர்
   எல்லையும் மாற்றமுறும் எனக்கூறி
   ஆற்றல்பட ஞான தேசிகனுக்குமே
   அருள் பிரசன்ன ஆசி தன்னை
3. தன்னிலே விகாரி சிலை திங்களில்
   தாமுரைக்க மூவைதிகதி குசன் வாரம்
   (விகாரி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள், **31.12.2019** செவ்வாய்க்கிழமை)
   நன்னயமாய் மாணிக்கவாசகர் தானும்
   நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
4. நலம் தரும் ஞானிகள் படையை
   ஞானசபையில் கொண்ட தேசிகா
   பலம் தரும் உன் பார்வை தானே
   பசிபிணி விரட்டும் மாதருமம் தானே
5. தானாக வந்து உலகோர்
   தருமத்தில் உதவி நின்று
   ஞானவானாக ஆகவே உண்டான
   நற்செயல்களில் இறங்கி நின்று
6. நின்றுமே தொடர் சேவை ஆற்றி
   நிலவுலகில் சற்குரு மலரடி
   நன்றாக எண்ணி பணிந்து
   நயமரிசி காய்கறி தைலமென
7. என அவரவர் சக்திக்கு
   இணைந்து வழங்கி கலந்து
   ஞானமுடன் சேவை பெருக்க
   நம்பகமுற தொண்டராகி தொடர

8. தொடர அவரவர் தூயநல்
தொண்டுக்கு ஏற்றபடி மேலும்
தடையின்றி வரங்கள் கிட்டி
தானவர்கள் சேவை மூலமாக

9. ஆகவே ஞானவான்கள் ஆகி
அறம்மிகுந்து அறிவில் சிறந்து
மகான் காட்டும் ஞான வழியில்
மகத்துவம்பட திளைத்து உயர்ந்து

10. உயர்ந்து அரங்கன் தேடுகின்ற
உலகமாற்றம் செய்யும் சக்திமிகு
நேயமுள்ள ஞானவான்கள் ஆகி
நிலைத்தன்மை கொண்ட உலகை படைத்து

11. படைத்து தேறுவர் மாறுவர் உறுதி
பரமஞானி பால தண்டாயுதனார்
படைவீட்டு ஞானியர் ஞானிகள்
பழுதில்லா வழியே உலகை மாற்றும் அருள் பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் மாணிக்கவாசகர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :

உலக மக்களிடையே தானதரும சக்தியை பெருக்கி பரவிடச் செய்து மக்களிடத்து தயவினை ஊட்டி வழிநடத்தும் அரங்கமகா தேசிகனே ஞானமாகிய உமது தூய நெறிக் கொள்கைகளை எவரெல்லாம் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டு கடைப்பிடிக்கின்றார்களோ, அவர்கள் தமது வாழ்வினில் ஞானிகளின் அருளால் வெற்றி பெறுவார்கள், உயர்நிலையை வல்லமையுடன் அடைந்து சிறப்படைவார்கள். அரங்கா அற்புதம்மிக்க உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் மார்கழி மாதம் 15ம் நாள் **31.12.2019**, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே அருள் பிரசன்ன ஆசி நூல்தனையே மாணிக்கவாசகர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மாணிக்கவாசகர்.

சர்வ நலங்களையும் தந்தருளும் ஞானிகள் படையினை ஞான சபையாகக் கொண்டிட்ட அரங்கமகா தேசிகனே உமது அருள் பார்வை சர்வ பலங்களை தந்தருள்வதோடு பார்வை பட்ட மக்களுக்கு பசிப்பிணி தானே விலகிடும். மாதருமங்கள் உலகினில் உண்டாகிடும். அரங்கன் செய்யும் பசிப்பிணி விரட்டும் தர்மத்தினிலே தானாக முன் வந்து பொருள் உதவிகளைச் செய்வதுடன் ஞானவான்களாக ஆவதற்கு உண்டான நற்செயல்களை அதிகமாக செய்து

தொடர்ந்து உலக மக்களுக்கு தொண்டுகளை செய்வதுடன் ஞானகுரு அரங்கன் மலரடியினை மனம் உருகி பற்றி நின்று பணிந்து வணங்கி, இயலவில்லை எனினும் அரிசி, காய்கறிகள், எண்ணெய் என்று அவரவரின் சக்திக்கு உட்பட்ட தர்மமேனும் செய்து அரங்கரின் தருமங்களிலே உதவிகள் செய்து நின்று அரங்கரின் தர்மத்தில் கலந்து ஞானமுடன் தொண்டுகளை அதிகமாக செய்து அரங்கரின் தொண்டர்களாகி அரங்கனை பின் தொடர வேண்டும்.

அரங்கமகானை பின் தொடரதொடர, அவரவரும் செய்யும் தொண்டிற்கு ஏற்றார் போல, மேல்மேலும் தடைகள் இன்றி வரங்களை பெறுவதுடன் அவர்கள் செய்கின்ற தொண்டுகளின் சக்தியாலே ஞானவான்களாக ஆகிடுவர். அறம் பெருகி அறிவில் சிறந்து மகான்கள் காட்டும் ஞானவழியில் சென்று உயர்வான நிலையை அடைந்து ஆறுமுக அரங்க மகான் இவ்வுலகினை மாற்றிட தேடும் தூய ஞானவான்களாக ஆகி உலகினில் சக்தி மிகுந்த நிலையான ஞான உலகைப் படைத்து கடைத்தேறுவர், மிக உயர்ந்த நிலைக்கு மாற்றம் அடைவர்.

பரமஞானி பாலதண்டாயுதனார் முருகப்பெருமானின் ஏழாம்படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலில் வாழும் அரங்கமகா தேசிக ஞானியர் மூலமாக உலக ஞானிகள் ஒன்றிணைந்து குறையின்றி உலக மாற்றம் நடந்தேறும் எனக் கூறுகிறார் மகான் மாணிக்கவாசகர்.

–சுபம்–

**மணிவாசகப் பெருமானின் மலரடி போற்றிட**
**அணிமா சித்தும் அருளுவார் நலமே.**

**– மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.**

# முருகன் திருவடி வாழ்க

ஞானிகள் திருஉருவப்படங்கள்,
ஆசான் அருளிய நூல்கள், தினசரி, மாத நாட்காட்டிகள்,
ஆசான் அருளுரைகள் அடங்கிய ஒலி ஒளி குறுந்தகடுகள் CD
மற்றும் ஞானத்திருவடி நூல்

கிடைக்கப் பெறாதவர்களும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்,**
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.
✆ 04327–255184, செல்: 90950 33311
மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

# துன்பங்கள் தீர கந்தனின் திருவடியே கதியாகும்

**அகத்தீசனை வணங்கி பூஜித்து ஆசி பெற்றிட்டால்....**

உயிர்க்கொலை செய்து புலால் உண்பவன், மது அருந்துகிறவன், சூதாடுகின்றவன் போன்றவர்களின் நட்பு அமையாமல் இருக்க ஆசிகளை வழங்குவார்.

**முருகப்பெருமானை வணங்கி பூஜித்து ஆசி பெற்றிட்டால்....**

உயிர்க்கொலை செய்து புலால் உண்பது பாவம் என்றும், மது அருந்துகின்றவன், சூதாடுகின்றவன் போன்றவர்களது நட்பு அமையாமல் நம்மை காப்பான். ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி என்று கூறி நாமஜெபம்தனை தொடர்ந்து செய்கின்றவர்களுக்கு நல்ல நட்பு அமையும், சொந்த வீடு அமையும், பண்புள்ள மனைவி, பிள்ளைகள் உண்டாகும், வறுமையில்லா வாழ்வினை வாழ்கின்ற அமைப்பையும் பெறுவார்கள். தொடர் பிறவிக்கு காரணம் அறியாமை என்றும், அறியாமைக்கு காரணம் மும்மலக் குற்றம்தான் என்பதையும், மும்மலக் குற்றத்தை வென்றால் அறியாமை நீங்கி சிறப்பறிவை பெறலாம் என்பதையும் அறிந்து முருகனருளால் அறியாமையை நீக்கிக் கொள்ள ஞானத்திற்குரிய அறிவும் அமையப் பெற்று மரணமிலாப் பெருவாழ்வையும் பெறுகின்ற வாய்ப்பையும் பெறலாம்.

ஒவ்வொருவருக்கும் வாழ்வில் பல பிரச்சனைகளும், நோயும், வறுமையும் இருக்கத்தான் செய்யும். அவர்கள் முருகப்பெருமானை வணங்கினால் நமக்கு உண்டான வறுமையும், நோயும், கடன்சுமையும், எதிர்பார்ப்புகள் நடக்காமல் போவதும், மனக்கவலையும் மற்றும் பலபல அநேக பிரச்சனைகளும் உண்டாவதற்கு காரணம் நாம் முன் ஜென்மங்களிலே செய்த பாவத்தினால்தான் இவ்வாறு ஏற்படுகிறது. இத்துன்பங்களுக்கு காரணம் நமது பாவங்களே அன்றி வேறொன்றும் இல்லை, வேறு யாரும் காரணம் இல்லை என்கிற உண்மை அறிவு உண்டாகி, வருவதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும், தெளிவான அறிவும் உண்டாகும்.

துன்பம் தீர முருகப்பெருமானின் திருவடிகளே கதியென்று நம்பி எல்லா பாவங்களையும் பொடிபொடியாக்கும் முருகனது திருவடிகளிலே சரணடைவார்கள். அப்படியில்லாமல் ஏதேதோ மந்திரங்களை ஜெபிப்பதாலும், யந்திரங்களை பூஜிப்பதும் மனக்கவலை தீர பயிற்சிகளை மேற்கொள்வதும், பலபல இடங்களில் சுற்றித் திரிவதாலும் பல போலி ஆசாமிகளை அணுகி தீர்க்க முயற்சிப்பதும் வீணான முயற்சி என்பதையும் தெரிந்து கொள்வார்கள், முருகனது திருவடிகளை நம்பினோர். ஆதலினாலே முருகப்பெருமான் திருவடிகளை நம்பினோருக்கு எத்துன்பமும் வராது.

## தினசரி பாராயணம்
## வெள்ளிக்கிழமை
# மகான் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய
# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி சயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கை யோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்

நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடைஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கை ஒருபாக மாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுஏறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலி யோடும் விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதி யாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

## மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

# அன்னை மருத்துவமனை,
# துறையூர்.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | கோபாலகிருஷ்ணன், மணப்பாறை | 80121 63639 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரெங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## தைப்பூசம் மற்றும் பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, தை மாதம் 25ஆம் தேதி,**
**08.02.2020 - சனிக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## மாசி பௌர்ணமி விழா

நாள் : **விகாரி ஆண்டு, மாசி மாதம் 26ஆம் தேதி,**
**09.03.2020 - திங்கட்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை
ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :
**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

# ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு<br>ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |


**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

# மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.
செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை
DD - வரைவோலை
MO - பணவிடை

...................................

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :

96882 78666, 91503 75562. trustkudil@gmail.com

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

# தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் அமுத மொழிகள்...

1. முருகா என்றால் மும்மலக் குற்றங்கள் நீங்கும்.
2. முருகா என்றால் செல்வநிலை பெருகும்.
3. முருகா என்றால் நல்லறிவைப் பெறலாம்.
4. முருகா என்றால் வறுமை, நோய்நொடிகள் நீங்கும்.
5. முருகா என்றால் ஞானவாழ்வு கைகூடும்.
6. முருகா என்றால் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்.

## உயிர் இரக்கமே இறைவழிபாடு....


**சென்னையில் அப்பார்ட்மெண்ட் மற்றும் தனி வீடு, வீட்டு மனைகள் வாங்க விற்க அணுகவும்.**

குருவருள் வேண்டி

**ம. அருள் பிரகாசம்**

**Srilekha Homes**
Gift to your dream

Plot No: 41, 2nd Floor, V.G.P. BABU NAGAR,
MEDAVAKKAM, CHENNAI - 100

Cell : 98841 27766 , 94449 88877

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.

# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

நவநிலை தரும்ஓர் நல்ல தெள்ளமுதே
சிவநிலை தனிலே திரண்ட உள்ளமுதே
பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே
கைபடாப் பெருஞ்சீர் கடவுள் வானமுதே
அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்
உகந்தநான்கு இடத்தும் ஓங்கிய அமுதே
பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே
தனிமுதல் ஆய சிதம்பர அமுதே
உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே
அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே 1290

**ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு**

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

*கவனகரின்*

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

## கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

## இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

---

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.


ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ________________________________

முகவரி : ________________________________

________________________________

ஊர் : ____________________ பின்கோடு __________

வட்டம் : ____________________ மாவட்டம் __________

தொலைபேசி : ______________ (கைபேசி) ______________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்